Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 80

திங்கட்கிழமை
14 பெப்ரவரி 2022

மாசி 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

## தவறான முடிவு: கர்ப்பிணி சாவு!

யாழ்ப்பாணம், பெப். 14
நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 4 மாத கர்ப்பிணிப் பெண் ஒருவர் தவறான முடிவு எடுத்து உயிரை மாய்க்க முற்பட்ட நிலை 16

## மித வேகக்காற்றுடன் மீண்டும் மழை தொடரும்

யாழ்ப்பாணம், பெப். 14
வடக்கு மாகாணத்தில் தற்போது பெய்து கொண்டிருக்கும் மழை இன்றுடன் குறைவடையும் என்றும், எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் மிதவேகக் காற்றுடன் மழை தொடரும் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.
இது தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்ததாவது:-
தற்போது வடக்கு 14

### ஐ.நா. கூட்டத்தொடரில் இம்முறை

# இலங்கைக்கு எதிராக பிரேரணை எதுமில்லை

கொழும்பு, பெப்ரவரி 14

**இந்த மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக எந்தவொரு பிரேரணையும் முன்வைக்கப்பட மாட்டாது - என்று அறிய முடிகின்றது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரது அறிக்கை மிகக் காட்டமாக முன்வைக்கப்படும் எனவும், அதையொட்டி சிலவேளைகளில் செப்ரெம்பர்மாத அமர்விலேயே, பிரேரணைகள் முன்வைக்கப்படலாம் என்றும் - இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.** [அ-ஒ-5-22]

## ரஷ்யா - உக்ரைன் மோதல்; வெடிக்கிறதா உலகப்போர்?

### 2 நாள்களில் தாக்குதல் ஆரம்பம்
### மொஸ்கோவை நெருங்கியது அமெரிக்க நீர்மூழ்கி

வொஷிங்டன், பெப். 14
இன்னும் இரண்டு நாள்களில் உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தும் என்று வெள்ளை மாளிகை கணித்துள்ளது.
உக்ரைன் எல்லையில் ரஷ்ய இராணுவத்தின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. எல்லையில் சுமார் 1 லட்சம் வீரர்களை ரஷ்யா நிறுத்தியுள்ளது. எல்லையில் பதற்றமான சூழல் நிலவி வருவதால் ரஷ்யாவைச் சமாதானப்படுத்தும் முயற்சியில் பல்வேறு 15



## காய்ச்சலால் இளைஞன் சாவு!

பி.சி.ஆர். சோதனையில் தொற்று உறுதி

யாழ்ப்பாணம், பெப். 14
காய்ச்சல் காரணமாக வீதியில் மயங்கி விழுந்த இளைஞர் ஒருவர் உயி 16

## சந்தர்ப்பம் கிடைத்தால் அரசைக் கவிழ்ப்போம்!!!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் ஆக்ரோஷம்

கொழும்பு, பெப். 14
எமக்குக் கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே இந்த துரதிர்ஷ்டவசமான அரசு கவிழ்க்கப்படும். பொய்யினால் தனது இருப்பை பாதுகாத்து 16

## பழிவாங்கமாட்டேன்

### இப்படிக் கூறுகிறார் டக்ளஸ்: ஆனால் அவருக்கு எதிராகப் போராடிய சமாசத்துக்கு புதிய நிர்வாகம்

யாழ்ப்பாணம், பெப். 14
நான் பிரபாகரனையே பழிவாங்காதவன். நான் சுப்பர் மடம் சங்கத்தைப் பழிவாங்குவேன் என்று நினைக்கவேண்டாம். இவ்வாறு தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அதே கூட்டத் 14

## உலக வரைபடத்திலிருந்தே இலங்கை காணாமற்போகும்

### நாட்டின் சீத்துவக்கேட்டை விவரிக்கிறார் சந்திரிகா

கொழும்பு, பெப். 14
மக்கள் அனைவரும் பொறுமை இழந்துள்ளனர். நாட்டில் அடுத்து என்ன நடக்கும் என்று என்னால் கூற முடியாது உலக வரைபடத்தில் இருந்தே 16

## மன்னிப்புக் கோருகிறார் கஜேந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், பெப். 14
தமிழீழ விடுதலைப் புலிகள் தனி நாட்டுக்காக - தமிழீழத்துக்காக போராடவில்லை. தமிழ்த் தேசத்தின் அங்கீகாரத்துக்காகவே போராடினார்கள் என்று தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சியில் தெரிவித்த கருத்துக்காகவே, தமிழ்த் தேசிய 14

## நான் அடித்திருந்தால் என்ன நடந்திருக்கும்?

### மீனவர்களை மிரட்டுகிறாரா அமைச்சர் டக்ளஸ்?

யாழ்ப்பாணம், பெப். 14
மீனவர் போராட்டத்தின்போது மீனவர்களுக்கு நான் அடித்திருந்தால் என்ன நடந்திருக்கும்? அதனால்தான் நான் 15

## உளுந்து, நிலக்கடலை அறுவடை நாசம்!!!

வவுனியா, பெப். 14
கடந்த சில நாள்களாக வடக்கில் பெய்து வரும் மழை காரணமாக வவுனியா மாவட்டத்தில் உளுந்தும், முல்லைத்தீவு 14

## உணவுப் பாதுகாப்பு இலங்கையில் மோசம்!

### ஐ.நா. எச்சரிக்கை

கொழும்பு, பெப். 14
இலங்கையில் வறுமையான குடும்பங்கள் தங்கள் உணவு நுகர்வைக் குறைத்துள்ளன அல்லது ஒப்பீட்டளவில் மலிவான ஆனால் குறைவான சத்துள்ள உணவுகளுக்கு மாறியுள்ளன. அவர்களின் உணவுப் பாதுகாப்பு, ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து நிலை ஆகியவற்றில் ஒட்டுமொத்த எதிர்மறையான 15

### வர்த்தக நிலையங்களுக்கான மின்விநியோகத்தை குறைக்க யோசனை

கொழும்பு, பெப். 14
மின்சாரத்தை சிக்கனமாக பாவனைக்கு உட்படுத்தாவிடின் எதிர்காலத்தில் மின்வெட்டை நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கும். 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல்கைதிகள் விடுதலை: எதிர்பார்ப்பு பொய்த்துவிட்டது

## அருட்தந்தை மா.சக்திவேல் அதிருப்தி



**வவுனியா, பெப். 12**

**பயங்கரவாத திருத்தச்சட்டத்தை தொடர்ந்து அரசியல் கைதிகள் விடுதலையாவார்கள் எனும் எதிர்பார்ப்பு பொய்த்துவிட்டது என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.**

அவரால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பயங்கரவாத திருத்தச் சட்டத்தைத் தொடர்ந்து அரசியல் கைதிகள் விடுதலையாவார்கள் எனும் எதிர்பார்ப்பு பொய்த்துவிட்டது. பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்கோ அதனால் மீறப்படும் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கோ எந்த ஆட்சியாளர்களும் ஆயத்தமில்லை என்பதையே பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத்தமென முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

தமிழ் மக்களின் அரசியல் ரீதியான பிரச்சினைக்கு சிங்கள - பௌத்த தேசியவாத அரசியல் தலைவர்கள் தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கு தவறியது மட்டுமல்ல, அரசியல் போராட்ட எழுச்சியை அடக்குவதற்கு பயங்கரவாத சட்டம் உருவாக்கப்பட்டதோடு அந்தச் சட்டம் நான்கு தசாப்தங்கள் கடந்தும் இன்றும் பாதுகாக்கப்படுகின்றது.

பயங்கரவாத தடைச்சட்டம் பிரிவினைவாதத்துக்கு எதிரானது என சிங்கள மக்கள் மத்தியில் கருத்துருவாக்கம் செய்யப்பட்டு அடித்தட்டு பௌத்த - சிங்கள மக்கள் பேரினவாத போதையூட்டி வளர்க்கப்பட்டனர். இந்தச் சட்டத்தில் மனிதாபிமானமற்ற மனித உரிமைகள் மீறும் சரத்துக்கள் உள்ளடங்கி இருக்கின்றன என்பதை அறிந்தும் சட்டத்தை இல்லாமற் செய்வதற்கு மக்களை திரட்டி அரசுக்கு அழுத்தம் கொடுக்கவோ அல்லது வேறு வகையில் எதிர்ப்பு காட்டவோ மக்கள் விடுதலை முன்னணியினர் முன்வரவில்லை. காரணம் சிங்கள - பௌத்த மக்கள் மத்தியிலிருந்தும் இராணுவத் தரப்பிடமிருந்தும் தமது கட்சியினருக்கு எதிர்ப்பு கிளம்பிவிடும் எனும் குறுகிய அரசியல் நோக்கமும் தமிழர்களின் தனிநாட்டு அரசியலை முற்றுமுழு தாக அழிக்க வேண்டும் எனும் உள் நோக்கமுமாகும்.

தற்போது இந்தச் சட்டம் இருந்தாலே தமிழர், முஸ்லிம்களின் அரசியல் எழுச்சியை, பிரிவினைவாதத்தை, பயங்கரவாதத்தை, அரச எதிர்ப்பு நடவடிக்கைகளை அடக்க முடியும் எனும் கோட்பாட்டின் அடிப்படையில் பயங்கரவாத தடைச்சட்டத்தில் திருத்த முன்மொழிவுகள் வைக்கப்பட்டுள்ளன. ஆதலால் மனித உரிமை மீறும் அடிப்படைத் தன்மைகள் திருத்தம் செய்யப்படவில்லை. இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்வோரும் உள்ளனர்.

சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் இந்தக் கொடிய சட்டம் நீக்கப்பட வேண்டும் எனக் கூறினாலும் உள்நாட்டு மனித உரிமை ஆணைக்குழு இந்தச்சட்டம் அகற்றப்படுவதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை. இவர்களும் ஆட்சியாளர்களின் கருவியாக செயற்படுவதே இதற்கான காரணமாகும்.

இந்நிலையில் வடக்கில் பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு எதிராக மக்களின் கையெழுத்து திரட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது வெறுமனே கட்சியை கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டமாக மட்டும் அமைந்துவிடக்கூடாது. அடுத்த தேர்தலுக்கு முகம் கொடுப்பதற்கான மறைமுக உள்நோக்கம் கொண்டதாகவும் அமைந்து விடக்கூடாது.

பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிரான மக்கள் சக்தியை வடகிழக்கிலும், வட கிழக்குக்கு வெளியிலும் கட்டியெழுப்புவதற்கான தேவை எழுந்துள்ளது. இத்தகைய சூழ்நிலையில் குறுகிய கட்சி அரசியல் நோக்கங்களுக்கு அப்பால் மக்கள் வாழ்வை காக்க மக்கள் சக்தியை கட்டியெழுப்பி அதன் மூலம் பயங்கரவாத தடைச் சட்டத்தை இல்லாதொழிக்கும் வகையில் செயற்படவேண்டும் - என்றுள்ளது. (ம-110)

# புத்தூர் பகுதியில் வீடுமீது தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 14

மோட்டார் சைக்கிளில் வருகைதந்த மூவர் வீட்டு உடைமைகள் மற்றும் வாகனங்களை அடித்து, உடைத்து சேதம் விளைவித்து தப்பிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் நிலாவரை - புத்தூர் பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை நடந்துள்ளது.

வாள்கள், கத்திகள், பொல்லுகள் சகிதம் நுழைந்த மூவர், வீட்டின்முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரம் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றை அடித்து உடைத்து சேதம் விளைவித்துள்ளனர். வீட்டின் கதவுக்கும் பெற்றோல் ஊற்றி தீ வைத்துள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அச்சுவேலி குற்றத்தடுப்புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-4,23)

# உடைமையில் கஞ்சா சந்தேகநபர் கைது:



யாழ்ப்பாணம், பெப்.14

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் அதே பகுதியைச் சேர்ந்த ஒருவரை அச்சுவேலி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பத்தமேனி பகுதியில் கஞ்சாவை உடைமையில் வைத்திருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்குச் விரைந்த பொலிஸார் அவரிடமிருந்து ஒரு கிலோ கஞ்சாவை மீட்டுள்ளனர். குறித்த நபர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளார் என அச்சுவேலி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-125,23)

# வீட்டில் கஞ்சா விற்பனை சந்தேகநபர் யாழில் கைது

யாழ்ப்பாண, பெப். 14

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதிப் பகுதியில் வீட்டில் வைத்து கஞ்சா விற்பனையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலையடுத்து மதுவரித் திணைக்களம் இணைந்து மேற்கொண்ட சோதனையிலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இதன் போது அவரிடமிருந்து 22 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு, அவருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-23,125,27)

## வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல் பார்வைக்கு

யாழ். மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்துக்கு ஒரு தொகுதி வாகன இலக்கத் தகடுகளின் பட்டியல் கிடைத்துள்ளது என யாழ்ப்பாண மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அறிவித்துள்ளது.

அந்தப் பட்டியல் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களினதும், மாவட்ட செயலகத்தில் உள்ள மோட்டார் வாகன போக்குவரத் திணைக்களத்தினதும் அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது. மாவட்ட செயலக இணையத்தளத்திலும் விவரங்கள் பதிவேற்றப்பட்டுள்ளன. (வ-இ)



# வவுனியாவிலும் அடுப்பு வெடிப்பு

வவுனியா, பெப். 14

வவுனியா, சிங்கள பிரதேச செயலக வீதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் எரிவாயு அடுப்பு நேற்றுமுன்தினம் வெடித்துள்ளது.

வீட்டில் இரவு சமையலில் ஈடுபட்ட பின்னர் சமையலறைக் கதவை மூடிவிட்டு தூங்கச் சென்றுள்ளனர். அதிகாலை வந்து பார்த்தபோது எரிவாயு அடுப்பு வெடித்துக் காணப்பட்டுள்ளது. இந்த நிலையில் வவுனியா பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து குறித்த இடத்துக்கு சென்ற பொலிஸார் சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-110)


# போதை மாத்திரைகளுடன் மல்லாகத்தில் ஒருவர் கைது

சாவகச்சேரி, பெப். 14

மல்லாகத்தில் பெருமளவான போதை மாத்திரைகளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மல்லாகம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இராணுவ புலனாய்வுப் பிரிவினர் நேற்றுமுந்தினம் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பிலேயே பெருமளவான போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது 265 போதைமாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபர் சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்தவர் எனவும், திருமணம் முடித்து மல்லாகம் பகுதியில் வசித்துவருகிறார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேலதிக விசாரணைகளின் பின்னர் குறித்த நபர் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார் என தெல்லிப்பழைப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லைதாண்டிய மீன்பிடி தமிழக மீனவர்கள் கைது

## எதிர்வரும் 25 ஆம் திகதிவரை மறியல்

**கொழும்பு, பெப். 14**

**இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 12 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

இரணை தீவு கடற்பரப்பில் இரு இழுவைப் படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்ட 12 மீனவர்கள் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர். அவர்கள் இரணைதீவு கடற்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். கைது செய்யப்பட்ட மீனவர்கள் தமிழகம், இராமேஸ்வரத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் சுகாதார பரிசோதனைகளின் பின்னர் கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டனர். நேற்றுமாலை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் எஸ். சிவபாலசுப்பிரணியம் முன்னிலையில் முற்படுத்தியபோதே இம்மாதம் 25ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (எ-60)



# சோலை வரி அறவீட்டில் கழிவு வழங்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப்.14

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வாழும் வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள மக்களுக்கு சோலைவரி அறவீட்டில் கொள்கை அடிப்படையில் விலைக்கழிவு வழங்குவதற்கு நல்லூர் பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் நிலத்தின் பெறுமானம் புதிதாக அளவீடு செய்யப்பட்டுள்ளதால் வரி அறவீடும் அதிகரித்துள்ளது. இதனால் வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள மக்கள் பாதிக்கப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்று உறுப்பினர்கள் அமர்வில் சுட்டிக்காட்டியிருந்தனர். இது தொடர்பான கருத்து பறிமாற்றங்களின் பின்னர், தற்போதுள்ள 8 வீத வரி அறவீட்டை, உறுதி செய்யப்படும் வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள மக்களுக்கு கொள்கை ரீதியாக 2 வீதமாக அறவிடுவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. கொள்கை உருவாக்க அடிப்படையில் அடுத்த மாதம் முதல் இதை நடைமுறைப்படுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ-20)

# மோ.சைக்கிள் மோதி நபரொருவர் காயம்

சாவகச்சேரி, பெப். 14

சாவகச்சேரியில் கடந்த வெள்ளிக்கிழமை பாதசாரி கடவையில் வீதியைக் கடந்தபோது மோட்டார் சைக்கிள் மோதியதில் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரி செலான் வங்கிக்கு முன்னால் உள்ள பாதசாரிக் கடவையால் சிலர் சென்றுகொண்டிருந்தபோது, யாழ். நோக்கி வந்த மோட்டார்சைக்கிள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரை மோதி பின்னர் பிறிதொருவரை மோதியதில் அவர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ரி-159)

# மோ.சைக்கிள் தீக்கிரை

யாழ்ப்பாணம், பெப்.14

வீடொன்றின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று இனந்தெரியாதவர்களால் தீ மூட்டி எரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு அச்சுவேலி, செல்வச்சந்நிதி தொண்டைமானாறு வீதியில் நடந்துள்ளது.

8 லட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. அதேவேளை, இது தொடர்பான முறைப்பாடு தங்களுக்குக் கிடைக்கவில்லை என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-23)

# சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், பெப்.14

"உதயன்" பத்திரிகையில் கடந்த 12ஆம் திகதி வெளியான "புதினம் தெரியுமா?" தொடர்பாக சுதேச மருத்துவத் திணைக்களத்தின் வடக்கு மாகாண ஆணையாளர் மருத்துவர் திருமதி க.ஜெபநாமகணேசன் விளக்கம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் கீழ் அச்சுவேலியில் இயங்கிவரும் மருந்து உற்பத்திப் பிரிவின் இயந்திர இயக்குநராகப் பணியாற்றுபவர் தொற்றா தோல் நோயால் பாதிக்கப்பட்டவர் என்பது மருத்துவ நிபுணரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும் இந்தப் பணியாளர் தனது கடமையின்போது கையுறை, தொப்பி, முகக்கவசம் அணிந்து இயந்திரங்களை இயக்குவதற்கு மட்டுமே ஈடுபடுத்தப்பட்டுள்ளார். மருந்துப் பொருள்கள் மற்றும் அது தொடர்பான மூலப் பொருள்களைக் கையாள்வதற்கு வேறு தொழிலாளர்களே ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்தப் பணியாளரது செயற்பாடுகள் எமது மருந்து உற்பத்திக்கு எந்தவிதப் பாதிப்பையும் ஏற்படுத்தாது என்பதை உறுதிப்படுத்துகின்றேன் என்று ஆணையாளர் அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)




**வவுனியா கம்பஸை ஜனாதிபதி திறந்து வைச்சிட்டுப் போட்டார். ஆனால் அவர் அதைத் திறந்து வைச்சதைவிட, அங்க இருந்த கல்வெட்டை சிங்களத்துக்கு முன்னுரிமை குடுக்கிற மாதிரி பக்கம் மாத்தி வைச்ச விசயம் தான் இப்பவரைக்கும் பரபரப்பாக பேசப்படுகுது.**

**அந்தக் கல்வெட்டு முதல் வைச்சமாதிரியே இருந்திருந்தா பிரச்சினையில்லை. இல்லாட்டி முதலே சிங்களமொழியில எழுதினதை இப்ப இருக்கிற மாதிரி, பார்வைக்கு படுகிற மாதிரி அமைச்சிருந்தாலும் ஆரும் ஒண்டும் சொல்லியிருக்க மாட்டினம். ஆனால் பார்வைக்குப் படுகிற பக்கத்தில முதலில தமிழ்மொழிக் கல்வெட்டை வைச்சிட்டு, கோத்தாபய வாறதுக்கு முதல்நாள் அதைத் திடீரெண்டு மாத்தினதுதான் பெரும் சர்ச்சையாப் போட்டுது.**

**சிலபேர் அப்பிடிக் கல்வெட்டு மாத்துப்பட்டதுக்கு காரணம் கம்பஸ் நிர்வாகம் எண்டு நினைச்சிருப்பினம். ஆனால் உண்மையில நடந்தது வேற. கம்பஸைத் திறக்க கோத்தாபய வாறார் எண்டதால, நிகழ்வு நடக்க ரண்டு நாளைக்கு முதலே கம்பஸை ஆமி தன்ர கட்டுப்பாட்டுக்க கொண்டந்திட்டு. அதோட கம்பஸில வேலை செய்யிறவையும் ஸ்டிரைக் நடந்ததால, அந்தப் பக்கம் இது ஆமிக்காரருக்கு நல்ல வசதியாப் போட்டுது.**

**கம்பஸ் மேல்மட்டத்தோட தொடர்பு கொண்டு, அந்தக் கல்வெட்டை சிங்களம் முன்னுக்குத் தெரியிற மாதிரி மாத்தி வைக்க வேணும் எண்டு ஓர்டர் போடுற மாதிரிச் சொல்லியிருக்கினம். ஆனால் மேல்மட்டக்காரர் "அது இருக்கட்டுமே. அதில ஒரு பிரச்சினையுமில்லையே" எண்டு சொல்லியிருக்கினம். ஆனால் ஆமி விடேலை. "அதை மாத்தி வைக்காட்டி சில வேளை பிரசிடென்ட் தன்ர பயணத்தை கான்சல் பண்ணவும் கூடும்" எண்டு வெருட்ட, வேற வழியில்லாமல்தான் அந்தக் கல்வெட்டை மாத்த கம்பஸ் மேல்மட்டம் , ஓமெண்டிருக்கு. அப்பிடி அனுமதி கிடைச்ச உடனேயே ஆமிக்காரர் சிங்களத்தை முன்பக்கமாக கொண்டந்து வைச்சிட்டினம்.**

**தமிழ்ப் பகுதியில இருக்கிற ஒரு கம்பஸில அமைக்கிற கல்வெட்டில எந்த மொழி எங்க இருக்கோணுமெண்டு தீர்மானிக்கிற அளவுக்கு இப்ப ஆமிக்காரருக்கு பவர் வந்திருக்கு. அதைவிட தமிழில கல்வெட்டை முன்னுக்கு வைச்சா திறப்புவிழாவுக்கு வரமாட்டன் எண்டு சொல்லுற அளவுக்கு, துவேசம் பிடிச்ச ஒருத்தர் இனியும் எங்களுக்கு தீர்வு தருவார் எண்டு நம்பிறியளோ.**



**- பட்சி**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கழுகை வளர்த்த நபரொருவர் கைது

கொழும்பு, பெப். 14

அரியவகை வெள்ளை நிற கழுகை, சட்டவிரோதமான முறையில் வளர்த்து வந்த நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.புத்தளம், பாலாவி இரண்டாம் கட்டைப் பகுதியிலுள்ள வீடொன்றில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து அரியவகை வெள்ளை நிற கழுகு கைப்பற்றப்பட்டுள்ளது. இந்த அரிய வகைக் வெள்ளை நிற கழுகை, விற்பனை செய்வதற்காகச் சந்தேகநபர் வீட்டில் வளர்த்து வந்துள்ளார் என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம-4,இ)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த (15.01.2022) மாதம் சனிக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் சின்னத்தம்பி பிரபாகரன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்றுமுன்தினம் (12.02.2022) சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (14.02.2022) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

கரந்தன் மேற்கு.
077 611 6757

(cs.lcs 18691) (2.6)

அன்பு மனைவி கீதா



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 03 . 07 . 1982

விண்ணில் 15 . 01 . 2022



### அமரர் சண்முகராஜா நிர்மலன்

[Business Promoter, BITUMIX (Private) Limited]

கற்றுத்தந்தவன் நீ! பற்று வைத்தவனும் நீ!
இனிய தருணங்களை எமதாக்கியவனும் நீ!
இற்றுவிடா இனிய வாழ்வை எமக்களித்து
அதில் நீ அற்றுப் போனதேன்!
ரூபமாய் எம்மை பாதுகாத்த நீ எப்போதும்
அரூபமாய் எம்மைச் சுற்றி பாதுகாப்பாய்!

கடந்த 15.01.2022 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்தும் தொலைபேசி வழியாகவும் ஆறுதல் கூறிய அனைவருக்கும், மரணச் சடங்கில் உறுதுணையாக நின்று செயற்பட்ட அயலவர்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டி கிரியைகள் கடந்த (12.02.2022) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகளும் மதிய போசனமும் இன்று (14.02.2022) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இராமலிங்கம் வீதி,
உடுவில் சுன்னாகம்.

குடும்பத்தினர்.

(CS 18558) 1-6



## மரண அறிவித்தல்

பிறப்பு 05 . 01 . 1942

இறப்பு 13 . 02 . 2022



### சின்னத்தம்பி சோதிப்பிள்ளை

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சோதிப்பிள்ளை நேற்று (13.02.2022) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பு - லக்ஷிமி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பாக்கியவதியின் பாசமிகு கணவரும், றெஜி, றூபி, பொபி ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணபிள்ளையின் அன்புச் சகோதரனும், கிருஷ்ணபிள்ளை - கிருஷ்ணதவத்தின் சிறிய தந்தையும், டயானா, மௌலி, கமி, றோய், நிலுக்சி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (14.02.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுப்பர்மடம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

றோ.க. தேவாலய வீதி,
உடுப்பிட்டி.
077 023 5928
076 351 4128

தகவல்:
குடும்பத்தினர்

(cs42900) (2.6)



## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 01 . 1934

மறைவு 12 . 02 . 2022



### சிவபாக்கியம் கந்தப்பிள்ளை

யாழ்ப்பாணம் நாவற்குழி தச்சந்தோப்பை பிறப்பிடமாகவும் கொழும்பு, கனடா, அமெரிக்கா, மட்டக்களப்பு, கொழும்புத்துறையை வதிவிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் கந்தப்பிள்ளை அவர்கள் கடந்த (12.02.2022) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பிள்ளை (Supreintendent of Radiography) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு பாக்கியம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான இரத்தினேஸ்வரி, கந்தசாமி, பொன்னுத்துரை மற்றும் சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரியும், Dr.சற்குருநாதன் (Consultant Dermatologist-Colombo), கணநாதன் (Retired Banker HNB-Colombo), பத்மநாதன் (Canada), செல்வமனோகரி (Jaffna), லேணுகா (America) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சந்திரதாசன் (Union Bank-Mannar) அவர்களின் பெரியதாயாரும், ராஜி, அன்னலிங்கம் (Retired Technical Manager-Sri Lanka Telecom), மைதிலி, நிமலன் (America), ஷைலா (Teacher, Karainagar Hindu College) ஆகியோரின் மாமியாரும், கார்த்திகா, கோபிசங்கர், லூக்ஷாந்தன், ஜனிசா, ஹரிஷா, விதுஷன், நிரோசிகா, ஸ்ருதிகா, துஷாரா, ஆதுரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், நேஹா (London) அவர்களின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2022) திங்கட்கிழமை பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் எற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல. 28,
விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
சற்குருநாதன் (077 304 0852) - மகன்
கணநாதன் (077 737 6922) - மகன்
அன்னலிங்கம் (071 536 0859) - மருமகன்
சந்திரதாசன் (0777 291 550) - மகன்

(CS 42902) 1/6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணத்துக்கான பதிலை இந்தியா செயலில் காட்டும்

## இரா.சம்பந்தன் நம்பிக்கை



கொழும்பு, பெப். 14

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு நாம் அனுப்பிய கூட்டு ஆவணத்துக்கான எழுத்துமூல பதிலை மோடியிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. அதற்கான பதிலை மோடி தலைமையிலான இந்திய மத்திய அரசு, இலங்கை அரசுக்குச் செயலில் காட்டும் என்று நாம் நம்புகின்றோம் - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ் பேசும் மக்களின் பொது நிலைப்பாட்டைப் பிரதிபலித்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றிணைந்து தயாரித்த கூட்டு ஆவணம் அண்மையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பப்பட்டது. இந்த ஆவணத்துக்கான பதில் மோடி தரப்பினரிடமிருந்து வந்ததா என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களின் பொது நிலைப்பாட்டை அந்தக் கூட்டு ஆவணத்தில் நாம் பிரதிபலித்துள்ளோம். அது காத்திரமான ஆவணம். இந்தியப் பிரதமருக்கு நாம் அனுப்பிய அந்தக் கூட்டு ஆவணத்துக்கான எழுத்துமூல பதிலை நாம் எதிர்பார்க்கவில்லை. எனினும், அதற்கான பதிலை மோடி தலைமையிலான இந்திய மத்திய அரசு, இலங்கை அரசுக்குச் செயலில் காட்டும் என்று நாம் நம்புகின்றோம். எமக்கான எழுத்துமூலப் பதிலை எதிர்பார்த்து அந்தக் கூட்டு ஆவணத்தை நாம் அனுப்பவில்லை. தமிழ்பேசும் மக்களின் விவகாரம் தொடர்பில் இந்திய மத்திய அரசு ஆழ்ந்த கரிசனை எடுத்து, இலங்கை அரசுக்கு சில விடயங்களைச் செயலில் புரிய வைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனே அந்த ஆவணத்தை நாம் இந்தியப் பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ளோம் - என்றார். (எ-22)



## கண் அறுவைச்சிகிச்சை இயந்திரங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், பெப். 14

மூளாய் கூட்டுறவு மருத்துவமனைக்கு கண் அறுவைச் சிகிச்சை இயந்திரங்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

காரைநகர் வாரிவளவைச் சேர்ந்த மருத்துவர் அமரர் இளையதம்பியின் ஞாபகார்த்தமாக அவரது பிள்ளைகளின் நிதிப்பங்களிப்பில் 42 லட்சம் ரூபா பெறுமதியான நவீன கண் அறுவைச் சிகிச்சை இயந்திரங்கள், மருத்துவமனை நிர்வாகத்தினரிடம் இளையதம்பியின் புதல்வர்களால் கையளிக்கப்பட்டன. (ம-ரி1,27)



## மன்னாரில் பெய்யும் மழையால் விவசாய விளைச்சல்கள் பாதிப்பு

மன்னார், பெப். 14

மன்னார் மாவட்டத்தில் கடந்த இரு தினங்களாகப் பெய்துவரும் மழையால் விவசாயிகள் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர்.

கடந்த ஆண்டு இறுதியில் ஆரம்பித்த பெரும்போக விவசாய விளைச்சல்கள் தற்போது சில இடங்களில் அறுவடை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கால நிலைப் பிரச்சினைகளால் தாமதிப்பு விதைப்புச் செய்யப்பட்ட பயிர்களில் தற்போது பூ உருவாகும் நிலை காணப்படுகின்றது. தற்போது பெய்துவரும் மழையால் பூக்கள் உதிர்வடையும் அதேநேரம், நெல் விளைச்சலும் பாதிக்கப்பட்டுள்ளது என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

ஏற்கனவே உரம் மற்றும் கிருமிநாசினிப் பிரச்சினைகளால் உரிய விளைச்சல் கிடைக்காத நிலையில், தற்போது பெய்துவரும் மழையும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (எ-213)

## ஆக்கத்திறன் கண்காட்சி

யாழ்ப்பாணம், பெப். 14

நீர்வேலி பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும் நடத்தும் ஆக்கத்திறன் கண்காட்சி சண்முகநாதன் அரங்கில் நாளை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக நீர்வேலி தெற்கு கிராம அலுவலர் திருமதி பிரேமசியா வசந்தகுமரன் கலந்துகொள்ளவுள்ளார். (ம)

## சட்டவிரோத மணல் ஏற்றிய டிப்பர் சாரதி கைது

யாழ்ப்பாணம், பெப்.14

அனுமதிப் பத்திரமின்றி வெளிமாவட்டத்தில் இருந்து மணல் ஏற்றி வந்த டிப்பர் வாகனம் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சாவல்கட்டு பிரதேசத்தில் நேற்று சிவில் உடையில் கடமையில் இருந்த பொலிஸார், சந்தேகத்துக்கு இடமான டிப்பர் வாகனம் ஒன்றைச் சோதனையிட்டபோது, அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

டிப்பர் வாகனம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட நிலையில், சாரதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-23)

## முல்லைத்தீவின் 8 கிராமங்கள் மகாவலி அதிகார சபையிடம்!

### மக்கள் கடும் எதிர்ப்பு

முல்லைத்தீவு, பெப்.14

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 8 கிராமங்களை இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் கையளிப்பதற்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்கள்.

கொக்கிளாயில் இருந்து நாயாறு வரையான கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் வடக்கு, கொக்குத்தொடுவாய் மத்தி, கொக்குத்தொடுவாய் தெற்கு, செம்மலை கிழக்கு, செம்மலை போன்ற 8 கிராம சேவையாளர் பிரிவுகளை மகாவலி அதிகார சபையிடம் நிர்வாக நடவடிக்கைகளுக்காக இணைக்க வேண்டும் என்று மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் கோரியிருந்தார்.

இந்த விடயம் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கரைதுறைப்பற்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. மகாவலி அதிகார சபைக்கு அதிகாரத்தைக் கொடுப்பதற்கு மக்கள் விரும்பவில்லை என கிராம மக்கள் தெரிவித்ததுடன், நாடாளு மன்ற உறுப்பினர்களும் இதற்கு எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். இந்த விடயம் மாவட்டஅபிவிருத்திக் குழுவில் எடுத்துக்கொள்ளப்படும் என்று அபிவிருத்திக்குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார். (எ-19)

## உரிமை மீறல்களுக்கு எதிராக போராடும் காலம் இது

### விரிவுரையாளர் ஹக்கீம் யாழில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 14

இன்றைய சூழலில் மக்கள் பல்வேறு விதமான இடர்களுக்கு எதிரான போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். மனிதன் ஒவ்வொரு உரிமை மீறலுக்கு எதிராகவும் போராட வேண்டிய காலமாக இந்தக் காலம் மாறிவருகின்றது என்று தெரிவித்தார் கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும் சட்டத்தரணியுமான எம்.ஏ. எம்.ஹக்கீம்.

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தால் நடத்தப்பட்ட மனித உரிமைகள் கற்கை நெறியில் பயின்ற மாணவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு அதன் தலைவர் எஸ்.யுகேந்திரா தலைமையில் யாழ். சர்வோதய மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒவ்வொரு மனிதனும் கௌரவம் -சமத்துவம் - சுயநிர்ணய உரிமைகளுடன் முழுமையாக வாழவே எத்தனிக்கின்றான். இவ்வுரிமைகள் எங்கு மறுக்கப்படுகின்றதோ அங்கு உரிமைக்கான போராட்டம் வலுவடைகின்றது.

இன்றைய சூழலில் மக்கள் பல்வேறு விதமான இடர்களுக்கு எதிரான போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். மனிதன் ஒவ்வொரு உரிமை மீறலுக்கு எதிராகவும் போராட வேண்டிய காலமாக இந்தக் காலம் மாறி வருகின்றது. எனவே இன்று மனித உரிமைகள் விடயத்தில் விழிப்பினைப்பெறும் மாணவர்கள் நலிவுற்ற மக்கள் படும் கஷ்டத்துக்கு எதிராக முன்னின்று செயற்பட வேண்டும் என்றார். (ம-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனாவால் மூதாட்டி சாவு!

கொடிகாமம், பெப். 14
நுணாவில் மேற்கைச் சேர்ந்த 78 வயதுடைய மூதாட்டி ஒருவர் கொரோனாத் தொற்றால் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.
மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு, கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்துள்ளார்.
அவரது சடலம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.
(ம-4-159)

# முன்னணியுடைய செயற்பாடுகள் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன

## சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு



வவுனியா, பெப். 14
**'13' ஆவது திருத்தம் தொடர்பாக ராஜபக்சக்கள் சொல்வதையே கஜேந்திரகுமாரும் சொல்கின்றார். இவர்கள் ராஜபக்சக்களின் நிகழ்ச்சி நிரலில் இயங்குகிறார்களா? என்ற சந்தேகம் எழுகின்றது -இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.**


இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது;
கஜேந்திரகுமார் போராட்டம் நடத்தியிருக்கின்றார். அதில் பிரகடனமும் வெளியிடப்பட்டிருக்கின்றது. நாம் 13ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொண்டு கடிதம் அனுப்பியுள்ளோம் என்று அந்தப் பிரகடனம் சொல்கின்றது.
மக்களுக்கான பேரணிகளை அல்லது பிரகடனங்களை நான் விமர்சிக்கவில்லை. அது மக்கள் ஆணை பெற்ற அரசியல் கட்சி ஒன்றின் கடமை.
ஆனால், கஜேந்திரகுமாரின் குற்றச்சாட்டுக்கள் அப்பட்டமான பொய்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது அவருக்குள்ள பிரச்சினையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியையும், ஏனைய தரப்புக்களையும் விமர்சித்து தமிழ்த் தேசியத்துக்குள் ஓர் எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்கின்றார்.
ராஜபக்சக்கள் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாது, அதிகாரப் பகிர்வு கிடையாது என்று கூறுகின்றனர். ராஜபக்சக்கள் சொல்வதையே இவர்களும் சொல்கின்றனர்.
இவர்களின் செயற்பாடுகளும், ராஜபக்சக்களின் கருத்துக்களும் ஒரு புள்ளியில் சந்திப்பதால் எமக்குச் சந்தேகம் ஏற்படுகின்றது.
இந்தியப் பிரதமருக்கான கடிதத்தை ஆறு கட்சிகள் சேர்ந்து உருவாக்கியிருக்கின்றன.
ஏழு தலைவர்கள் கையொப்பமிட்டுள்ளனர். ஆனால், நான் தான் அதை வரைந்தேன் என்று ஒருவர் கூறுகின்றார்.
தனிநபரை முன்னிலைப்படுத்தும் விடயத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. இதற்காகத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்ய வேண்டும் என்று நாம் கோரி வருகின்றோம் - என்றார். (எ-110)



ஸ்ரீலங்கா அரசின் தமிழர் மீதான இனப்படுகொலையில் இருந்து உறவுகளைக் காக்கக்கோரி, சுவிஸ் ஜெனிவா ஐ.நா. முன்றிலில் தன்னைத் தீயில் எரித்து ஈகைச் சாவடைந்த ஈகைப்பேரொளி முருகதாசனின் 13 ஆம் ஆண்டு நினைவேந்தல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகத்தில் நேற்று முந்தினம் இடம்பெற்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர். (ம-4-இ)



நாட்டுப்பற்றாளர் சத்தியமூர்த்தியின் 13 ஆம் ஆண்டு நினைவேந்தல், நேற்றுமுன்தினம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.
நினைவேந்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், மகளிர் அணித்தலைவி வாசுகி சுதாகரன், மகளிர் அணிச் செயலாளர் கிருபா கிரிதரன் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர். (ம-ரி1)




ஊடகவியலாளர் பு.சத்தியமூர்த்தியின் 13ஆம் ஆண்டு நினைவுதினம், நேற்றுமுன்தினம் 11.30 மணிக்கு யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்றது. இதன்போது ஊடகவியலாளர்கள் பலரும் கலந்துகொண்டு அவரின் உருவப் படத்துக்கு மாலை அணிவித்து தீபமேற்றி மலரஞ்சலி செலுத்தினர். (ம-ரி1,20)



## ஊடக அறிவு பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், பெப். 14
உள்ளூராட்சி மன்றங்களின் பெண் உறுப்பினர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பெண் உறுப்பினர்களுக்கு ஊடக அறிவு மற்றும் டிஜிற்றல் அறிவை மேம்படுத்தும் நோக்கிலான பயிற்சிப் பட்டறை, கடந்த 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்றது.
'கபே' அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற பயிற்சிப்பட்டறையில் புத்தசாசன மத விவகார கலாசார அமைச்சின் ஊடக செயலாளரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான ஜெ.யோகராஜ், சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ.மயூரன், கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அகமட் மனாஸ் மகீன், ஆசிரியர் செ.பிரதாப், உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்கள், சிவில் சமூக பெண் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ம-ரி1,159)

## 12 வயதுக்குட்பட்டோருக்கு கொரோனாத் தடுப்பூசி?

கொழும்பு, பெப். 14
12 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கும் கொரோனாத் தடுப்பூசி பந்துரைக்கப்பட்டுள்ளது. எனினும் இன்னும் உறுதியான முடிவு எடுக்கப்படவில்லை என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக இன்னும் சுற்றறிக்கையும் வெளியிடப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
அதேவேளை 12 முதல் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு தடுப்பூசியின் இரண்டாவது டோஸைச் செலுத்துவதற்கு, சுகாதார அதிகாரிகளின் பரிந்துரைகளுக்காக அமைச்சு காத்திருக்கின்றது என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். (ம-4-இ)

## வழிபாட்டில் உயிரிழந்த சிறுவனுக்கு கொரோனா!

கொழும்பு, பெப். 14
சுகவீனமுற்ற சிறுவனுக்கு சிகிச்சை அளிக்காது, வீட்டில் மதப் பிரார்த்தனை செய்த நிலையில், அங்கு உயிரிழந்த சிறுவனுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
நீர்கொழும்பு, படல்கமைப் பிரதேசத்தில் 10 வயதுச் சிறுவன் ஒருவன் அண்மையில் உயிரிழந்தார். குறித்த சிறுவனுக்கு காய்ச்சல் இருமல், சளி ஆகிய நோய் அறிகுறிகள் இருந்துள்ளன.
சிறுவன் அங்கு உயிரிழந்த பின்னரும் வீட்டில் வைத்து தமது மத வழிபாட்டுக்கு அமைய பிரார்த்தனை செய்துள்ளனர். இதனையடுத்து சிறுவனின் இறப்புத் தொடர்பில் சிறுவனின் தாய், தந்தை மற்றும் பாட்டி ஆகியோர் கைது செய்யப்பட்டனர். சிறுவனின் தாயார் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். ஏனைய இருவரும் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நாளொரு நல்வார்த்தை

"நீங்கள் வாழும் வாழ்க்கையை நேசியுங்கள், நீங்கள் நேசிக்கும் வாழ்க்கையை வாழுங்கள்".
- *பாப் மார்லி*


## பழைய மேடையில் பழைய நாடகம்!

இலங்கையில் முன்னெப்போதுமில்லாதளவுக்கு பொருளாதார நெருக்கடி தலைவிரித்தாடுவதற்கு பல காரணங்கள் உண்டு. கொரோனாப் பெருந்தொற்று, டொலர் பிரச்சினை, கோத்தாபய அரசாங்கத்தின் அவசரத்தனமான முடிவுகள், உள்ளூர் உற்பத்தித்துறையில் உண்டான வீழ்ச்சி, ஏற்றுமதியில் சறுக்கல், உலக சந்தையில் பொருள்களுக்கான விலை உயர்வு என்று ஏகப்பட்ட காரணங்களை அடுக்கிக் கொண்டேபோகலாம். ஆனாலும் இப்படி வெளித்தெரியும் காரணங்களைவிட மறைந்திருக்கும் இன்னொருவிடயமே இவற்றுக்கெல்லாம் உண்மையான மூலகாரணம். அது, மேற்குநாடுகள் இலங்கையில் ஆட்சி மாற்றத்தை விரும்புவதே.

இப்போது இலங்கையில் நடப்பது ராஜபக்சக்களின் ஆட்சி. அதிலும் ஆட்சியதிகாரத்தைக் கையில் கொண்ட ஜனாதிபதி கோத்தாபயவும், நிதியமைச்சர் பஸிலும் அமெரிக்கக் குடியுரிமை பெற்றவர்கள். (கோத்தாபய, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தன் அமெரிக்கக் குடியுரிமையைத் துறந்த போதிலும், அவரின் குடும்பத்தினர் இப்போதும் அமெரிக்கப் பிரஜைகளே) இப்படி ஆட்சியையே அசைக்கும் வல்லமை கொண்ட இரண்டு ராஜபக்சக்கள் அமெரிக்கக் குடியுரிமை கொண்டவர்களாக இருப்பதனால், இம்முறை அவர்களின் ஆட்சி தம்மோடு இயைந்ததாக இருக்கும் என்றே மேற்குலகு நினைத்தது. ஆனால் நடந்ததோ வேறு. தாங்கள் குடியுரிமை பெற்ற நாடுகளின் நலனைவிடவும், தங்கள் சொந்தநாட்டின் (இலங்கையின்) நலனைவிடவும், தங்களின் பணப்பையை நிரப்ப எந்த நாடு உதவுகின்றதோ அதற்கு விசுவாசமாக இருப்பதே ராஜபக்சக்களின் இப்போதைய கொள்கை. அதனால் தான் அள்ளிக்கொடுக்கும் சீனாவுக்காக மேற்குலகோடு அரசாங்கம் மல்லுக்கட்டியது. இலங்கையை குட்டிச் சீனாவாக மாற்ற இடமும் கொடுத்தது.

மெல்ல மெல்ல சீனாவின் கொலனியாக இலங்கை மாறுவது மேற்குலக நாடுகளுக்கு உவப்பானதாக இருக்கவில்லை. அதனால் பிரகடனப்படுத்தப்படாத பொருளாதாரத்தடை ஒன்றை இலங்கை மீது விதித்ததன் எதிரொலியே, இப்போது நாடு சந்திக்கும் பொருளாதார நெருக்கடி. அமெரிக்கா நினைத்திருந்தால், இலங்கையின் டொலர் பிரச்சினையை ஒரு செக்கனில் முடிவுக்கு கொண்டு வந்திருக்கலாம். ஆனால் அப்படியொரு உதவியைச் செய்யாமல், டொலர் தட்டுப்பாட்டால் என்னென்ன விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்பதை அனுபவபூர்வமாக இலங்கையை உணரவைப்பதே மேற்குலகின் திட்டம். அத்தோடு எப்போதும் சீனாவின் விசுவாசிகளாக இருக்கும் ராஜபக்சக்களை நாட்டு மக்களே வெறுக்க வேண்டும், அதனூடாக ஆட்சி மாற்றத்தை உண்டாக்க வேண்டும் என்பதும் அதே மேற்குலகின் திட்டம். அதற்கேற்றாற்போல, ராஜபக்சக்களும் இனத்துவேசத்தோடு, சட்டத்தை மிதித்து, நாட்டு நலனை புறந்தள்ளி, தாம் நினைத்ததை மட்டும் செயற்படுத்தி தாமே தமக்கு குழி தோண்டிக் கொண்டிருக்கிறார்கள். இதன் மூலம் மேற்குலகின் திட்டத்தை இன்னும் இலகுபடுத்துகிறார்கள் ராஜபக்சக்கள்.

இந்த ஆட்சிமாற்றத்துக்காக, தமது நலனுக்காக அவ்வப்போது ஈழத்தமிழர்களையும், இனப்படுகொலை விவகாரத்தையும் வைத்து ஜெனிவாவின் மேற்குலகு ஒரு சூதாட்டத்தை நிகழ்த்துவதுண்டு. ராஜபக்சக்களின் முதலாம் ஆட்சிக் காலத்தின் போதும் இதேபோன்ற உத்தியைக் கையாண்டே, ராஜபக்சக்களின் கழுத்தை மேற்குலகு இறுக நெரித்தது. இப்போதும் அதே காட்சிகள் விரியத் தொடங்கிவிட்டன. பழைய மேடையில் பழைய காட்சிகள். இந்தமுறையும் அந்த நாடகத்தை உண்மையென நம்பி, எங்களுக்கு தீர்வு வந்துவிடுமென ஈழத்தமிழர்கள் புளகாங்கிதம் அடைந்தால், எப்போதுமே இலவு காத்த கிளிகளாகவே இருக்க வேண்டியதுதான்.




# மதநல்லிணக்கத்தைக் குழப்ப கேதீச்சரவளைவில் சொரூபம்!

## சைவ மகாசபை கண்டனம்

**மன்னார், பெப். 14**

**மத நல்லிணக்கத்துக்கு ஊறு விளைவிக்கும் வகையில், திருக்கேதீச்சர வளைவு உடைக்கப்பட்டு வீதியின் முகப்பில் மிகப்பெரிய மாதா சொரூபம் அமைக்கப்பட்டு, நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டுள்ளது என்று அகில இலங்கை சைவ மகா சபை சுட்டிக்காட்டியுள்ளது.**



இது தொடர்பான வழக்கு நீதிமன்றில் நிலுவையில் உள்ள நிலையில், தேவாலய நிர்வாகம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. மத நல்லிணக்கத்தைப் பாதிக்கும் இந்தச் செயலுக்கு உறுதுணை வழங்காது, மன்னார் ஆயர் இல்லம் சொரூபத்தை அவ்விடத்திலிருந்து அகற்ற வேண்டும்.

அரச உயர் அதிகாரிகளும் அசமந்தப் போக்குடன் நடந்து கொள்ளாது, மத நல்லிணக்கத்துக்கு ஊறு விளைவிக்கும், தொல்லியல் மரபுரிமைகளில் மாற்றம் செய்யும், தனித்துவத்தைச் சீர்குலைக்கும் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துவதுடன், சர்ச்சைக்குரிய சொரூபத்தை அகற்ற உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அகில இலங்கை சைவ மகா சபை மேலும் தெரிவித்துள்ளது.

(ம-4-125)

# ஒப்பந்தத்தை மீறி சொரூபம் பொலிஸாரிடம் முறைப்பாடு!


மன்னார், பெப். 14

திருக்கேதீச்சர ஆலயத்துக்குச் செல்லுகின்ற வீதியில் கிறிஸ்தவ மதச் சின்னங்களை அமைக்கக்கூடாது என்று கொழும்பு மேல் நீதிமன்றால் ஆரம்ப காலத்தில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தையும்மீறி, குறித்த வீதியில் மாதா சொரூபம் வெளித்தெரியும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது என்று திருக்கேதீச்சர ஆலயத்தின் திருப்பணிச் சபையின் இணைச்செயலாளர் இராமகிருஷ்ணாவால், உயிலங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

திருக்கேதீச்சர ஆலய வீதியின் ஆரம்பப்பகுதியில் காணப்படுகின்ற தேவாலயம் அமைக்கப்படும்போது, ஆலய வீதியை எல்லையாக கொண்ட மதிலூடாக பாதையோ அல்லது சின்னங்களோ வைக்கக் கூடாது என்று ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. ஏற்கனவே தேவாலயத்துக்கு பாலாவி தீர்த்தம் தொடர்பான வழக்கொன்றும் இடம்பெற்று வரும் நிலையில், மன்னார் பூநகரி வீதியையும், திருக்கேதீச்சர வீதியையும் இணைக்கும் மூலைப் பக்கமாக மதில் உட்புறமாக மாதா சொரூபம் அமைக்கப்பட்டுள்ளது. இது நீதிமன்றக் கட்டளையை மீறும் செயற்பாடு என்று அவர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ம-4-125)

நாளை
15.02.2022
செவ்வாய்க்கிழமை
மாசி 03
சுபநேரம் : 11.03 - 12.33
ராகுகாலம் : 03.33 - 05.03
நடேசரபிஷேகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆதலால் காதல் செய்வீர்...

கனக.பாரதிசெந்தூரன்

காதல் என்பது காலங்காலமாய் உயிர்களிடத்தே தோன்றும் ஓர் ஒப்பற்ற உணர்வாகும். உயிர்கள் ஓர் ஒழுங்கிற்தோன்றுவதாலேதான் உயிர்களுக்கிடையேயும் காதல் ஓர் ஒழுங்கு முறையில் ஊடுருவி விடுகிறது. தூக்கணாங்குருவி உலகில் எந்தவொரு பொறியியலாளனும் கட்டமுடியாத கூட்டைக் கட்டிப்பெண் தூக்கணாங் குருவியின் காதலை வென்று விடுகிறது. அன்றிற் பறவைகளிற் கூடப் பெண் அன்றில் இட்டமுட்டைகளை ஆண் அன்றில் அடைகாத்துத் தன் பெண் அன்றிலின் அன்பைப் பெற்று விடுகிறது. இப்படி எத்தனையோ உயிர்களில் காதல் நிலைகொண்டுள்ளது. காதல், மனிதருக்கு மட்டும் உரியது என்று எண்ணியிருப்போமேயானால் அது எமது சிந்தைப் பிழை. உயிர்களுக்கே பொதுவானதுதானே காதல். அது மனித உறவினுள் புகுந்துகொண்டு நாடிநாளங்களில் கூட கனவுகளைக் காணச்செய்யும் அற்புதசக்தி. ஆயினும் என்ன? ஆண், பெண் காதல்தானே காவியகாலந்தொட்டுப் பேசப்பட்டுவருகிறது.

அதனால் தான் காதல் அகம்சார் பண்புகளால் நிலையான புகழ்கொண்டு இன்று வரையும் நிலைத்து வாழ்கிறது. இனியும் நிலைத்தே நீடூழிநிற்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

படைப்பின் சாரம் ஆண். ஆணின் சாரம் பெண் என்கிறார் கவிக்கோ அப்துல்ரகுமான். எத்தனை உண்மை வரிகள். காதல் என்பது பழைய மது. நாம் தான் புதிய புட்டிகள். அதைப் பருகுந்தோறும் இன்பம் ஊற்றெடுக்கும். வாழ்வில் ஒருமுறையாவது காதலித்துவிட்டுச் சாகுங்கள் என்றார் பேரறிஞர் அண்ணா. அதனால்தான் என்னமோ முன்பே பாரதி 'ஆதலால் காதல் செய்யுங்கள்' என்றாரோ!

தமிழ்மொழி பக்தியின்மொழி என்பார் தனிநாயகம் அடிகளார். காதலின் வழியே பக்தி பிறக்கின்றது என்கிறது பதிகங்கள். சங்ககாலம் தொட்டுக் காதலின் சிறப்புக்களும் பிரிவுகளும் விரகவேதனைகளும் தமிழ்ப் புலவர்களால் மீதுறப் பாடப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. காலங்காலமாய்த் தோன்றும் புலவர்கள் கூட காதலைத்தான் பாடித் தீர்க்கமுயன்று படுதோல்வி அடைந்திருக்கிறார்கள். கவிஞர்களும் புலவர்களும் எப்போதும் வியப்புக்குரிய வர்கள். காதலால் பிறர்படும் துயரைத் தாம்படும் துயராகப் பாடுகையில் 'ஒழுங்கு தவறிய மின்சாரத்தைத் தீண்டு பவர்களைத் தீண்டும் மின்சாரம் போல' பிறரிடத்திலும் அந்தக் காதலைப் பரவச்செய்துவிடுவர். சங்ககாலம் தொட்டு இதற்குத் தக்க சான்றுகளுண்டு. சங்ககாலம் மட்டுமல்ல வள்ளுவன், இளங்கோ, புகழேந்தி, கம்பன் என்று நீண்டு அந்தப் பட்டியல் பாரதியை மோதிக் கண்ணதாசன், வாலி, வைரமுத்து, கவிக்கோ, நா.முத்துக்கமார் என்று நீண்டுகொண்டே போகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான காதல், இன்றும் புதுமையாகவே இருக்கிறதே இது என்ன? அதிசயம். இன்னும் அமுதசுரபியாய் இனித்து வளர்ந்து கொண்டே போகிறதே? சங்ககாலத்தில் பதுமனார் என்னும் புலமைச் சான்றோன் தான் பாடிய அகப்பாடலில் 'காதல் வாய்த்த தலைவியின் மனநிலையை தலைவியாகவே கூறுகின்றார்.' ஆண்பாற் புலவன் ஒருவனால் பெண்ணின் மனநிலைகளை உள்வாங்கி எப்படிப் பாடமுடிந்தது? என்பது இன்று வரையிலும் தமிழின் சிறப்புத்தான். தலைவி சொல்கிறாளாம் 'நாம் வாழும் நெய்தல் நிலத்தில் என்னோடு கூடிக்களித்திருந்து இன்பம் துய்த்த தலைவன், இப்போது என்னைத் திருமணம் செய்யும் நாளை திருமணத்திற்காகப் பொருளீட்டுவதைக் காரணம் காட்டிகாலம் தாழ்த்துகிறான்' அதனால் என் உள்ளம் நோகிறது. இதை எப்படி உரைக்கிறாள் தெரியுமா?

என் தோழியே...! சாமப்பொழுதுகழிந்துவிட்டது. நேரமோநள்ளிரவானது. ஓசைகள் ஏதுமின்றிஊரோஅடங்கிவிட்டது. அதுபோலவேபறவைகளும் விலங்குகளும் அயர்ந்துவிட்டன. இந்தப் பரந்த உலகமக்களும் எந்தவிதக் கவலையும் கோபமுமின்றிஉறக்கம் கொள்கின்றனர். ஆனால் நானோ உலகமே ஓசையின்றிக் கிடக்கும் இவ்வேளையில் தூக்கமின்றிவாடுகிறேன் - என்றாள். இதனை

'நள்ளென்றயாமம் சொல்லவிந்
தினிதடங்கினரேமாக்கண் முனிவின்று
நனந்தலையுலகமும் துஞ்சும்
ஓஒர் யான் மன்றதுதுங் சாதுஏனே?

எனக்காதல் வயப்பட்ட பெண்ணாகப் பாடிசங்கத் தலைவியை நம் கண்முன் நிறுத்துகிறார். காதல் என்றாலே தோழிகளின் காதுகள் சுமைதாங்கியாகிவிடும் போலும்.

அணிலாடு முன்றிலாரோ, உடன்போக்கிற்குப் பெயர்பெற்ற பாலை நிலத்தில் வெந்துதகிக்கும் தலைவியின் மனநிலையை ஆளரவமற்ற வீட்டிலே குதித்தாடித் திரியும் அணிலோடு ஒப்பிடுகிறார்.

'அடிதோழி, என் காதலன் என் அருகில் இருந்தபோதெல்லாம் நான் மிகவும் மகிழ்ச்சியோடு திருவிழா நடைபெறும் ஊரில் இள்சுகளின் மனம் மகிழ்வதைப் போன்ற மகிழ்வோடு நாள்களைக் கழித்தேன் ஆனால் இப்பொழுதோ தலைவன் என்னைப் பிரிந்துசென்று விட்டான் அதனால் என்மனம் ஆட்கள் இல்லாது வெறுமையுற்ற வீட்டிலே தனியாக அணில் துள்ளித் திரிவதைப்போல பொலிவிழந்து வாடுகிறேன்' என்று தோழிக்குச் சொல்கிறாள். பாவம் தோழியால் அவளை எப்படித்தான் ஆற்ற முடியும். அது காதலல்லவா? எப்படி ஆற்றமுடியும்.

காதலர் உழையராகப் பெரிதுவந்து
சாறுகொளூரிற் புகல்வேன் மன்ற
அத்தநண்ணியஅங்குடிச் சீறூர்
மக்கள் போகியஅணிலாடுமுன்றிற்
புலம்பில் போலப் புல்லென்று
அலப்பென் தோழியவர் அகன்றஞான்றே.

என்று முன்றிலார் காதல் முள்ளை எம் நெஞ்சிற் தைத்துவிடுகிறார். பாவம் அணிலாடுமுன்றிலார் ஆணோ? பெண்ணோ? யாரறிவார். ஆனால் காதலை யாவரும் அறிவர் அதுதானே காதலின் சக்தி. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தமிழ்நாடுதர, வள்ளுவனோ இறவாப் புகழுடைய வள்ளுவத்தை நமக்கருளினான். அத்தகையபொய்யாமொழியார் காதலைக் கள்ளோடு ஒப்பிட்டு என்ன சொல்கிறார் தெரியுமா? கள் என்று சொன்னால் மகிழ்ச்சி த(வ)ராது அதைப் பருகினால் மட்டுமே மயக்கும். ஆனால் காதலன் தன் காதலியை நினைத்தாலே மனதில் மகிழ்வும் ஒரு மயக்கமும் ஒரே சமயத்தில் வந்துவிடும் என்கிறார்.

உண்டார் கண் அல்லதுஅடுநறாக் காமம்போல் கண்டார் மகிழ்செய்தல் இன்று இப்போது சொல்லுங்கள் எதுமகிழ்வானது.

பெண்களின் மனதை ஆண்பாற் புலவர்கள் பாடுவதில் ஒருநயம் இருக்கிறதென்றால் ஆணின் மனதை ஆணே பாடுவதும் யதார்த்தமல்லவா? ஒரு நயமல்லவா? அத்தகைய காதலை அள்ளித் தெளித்தவன் வேறுயாருமல்ல அவன் மகாகவியேதான். சரி இனி பாரதிக்கு வருவோம். 19ஆம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற பெருங்கவிஞன் பாரதி. பிறர் மனதை அறிந்து பாடுவதிலும் பாத்திரமாகிப் பாடுவதிலும் பெரும் சமர்த்தன் அவன். காதலால் ஆண் மகனொருவன் அடையும் துயரை 'கண்ணம்மாஎன் காதலி' குறிப்பிடம் தவறியது எனும் பகுதியில் பிரிவாற்றாமையை, அதன் துன்பவெள்ளத்தை அழுந்தி, அழுத்தி இப்படிப்பாடியிருக்கிறான்.


“தீர்த்தக் கரையினிலேதெற்கு மூலையில்
செண்பகத் தோட்டத்திலே
பார்த்திருந்தால் வருவேன் வெண்ணிலாவிலே
பாங்கியோடுஎன்றுசொன்னாய்
வார்த்தைதவறிவிட்டாய் கண்ணம்மா கண்ணம்மா
மார்புதுடிக்குதடி
பார்த்தவிடத்திலெல்லாம் உன்னைப் போலவே
பாவைதெரியுதடி..
மேனிகொதிக்குதடிதலைசுற்றியே
வேதனைசெய்குதடி
வானிலிடத்தையெல்லாம் இந்த
வெண்ணிலாவந்துதழுவுதுபார்
மோனத்திருக்குதடி இந்தவையகம்
மூழ்கித் துயிலினிலே
நானொருவன் மட்டிலும் பிரிவென்பதோர்
நரகத்துஉழலுவதோ?.." என்று நீட்டிச் செல்கிறான்.

தினமும் காதலியைக் கண்டும் தொட்டும் முகர்ந்தும் மகிழ்ச்சிகொள்ளும் காதலன் அன்றும் வழக்கம்போல் தாம் சந்தித்துக்கொள்ளும் இடத்திற்குச் சந்திக்க வரச்சொல்கிறான். அவளும் வருகிறேன் காத்திரு என்று நீராடும் தீர்த்தக் கரையையும் அங்குள்ள தெற்கு மூலையையும் நினைவுபடுத்துகிறாள். வானில் நிலாதோன்றும் வேளையில் நிச்சயம் தான் வருவதாக குறிப்பிடமும் கொடுக்கிறாள். வரும்போது பாங்கியையும் துணைக்கு அழைத்து வருகிறேன் என்கிறாள். ஆனால் ஏனோ தெரியவில்லைஅவள் வாராது போகிறாள். காத்திருந்த காதலனோ துடித்து விடுகிறான். அவள் வாராத அந்த இராத்திரியின் நீளம் அவனுக்கு பெரும் வேதனையைக் கொடுக்கிறது. தன் மனதைத் தானேதேற்றத் துணிகிறான். 'நீவாராததால் என் மேனி கொதிக்கிறது, தலைசுற்றுகிறது.துன்பத்தையளிக்கிறது.நிலவு கூடக்குறித்த நேரத்திற்கு வானில் வந்துதன் காதலனைத் தழுவிக்கொள்கிறது. முழு உலகமுமே அரவமின்றித்துயில் கொள்கிறது. ஆனால் நான் மட்டும் உன் பிரிவால் நரகத்தில் உழல்கிறேனே! என்று அனலிடைப் பட்டமெழுகெனத் தவித்து விடுகிறார். இதனைத்தான் வாலி நிமிசங்கள் ஒவ்வொன்றும் வருசங்களாகும் நீயென்னை நீங்கிச் சென்றாலே என்றாரோ? யாரறிவார். பதுமனாரும் அணிலாடு முன்றிலாரும் பெண்ணாக மாறிச்சொன்ன காதலை அதன் பிரிவாற்றாமையை பாரதி ஓர் ஆணாகி நினைந்துருகு கிறார். இங்கே காதற் பிரிவாற்றாமையால் மூவருமே ஒருமிக்கின்றனர். என்பதே இலக்கிய இரசிகர்களின் எண்ணமாகும்.

காலம் மாறலாம் நம் காதல் மாறுமா? என்று வைரமுத்து கேட்பது சரிதானே? இளந்தை மீண்டும் பெறும் போதுதான் காதலின் மதிப்பு அதிகரிக்கும். உடல் என்ற ஊடகத்தின் வழியே உள்ளம் சென்று சேரும் பயணம்தானே காதல். ஒரே கடல்தான் ஒருதுளி உப்பாகிறது ஒருதுளி முத்தாகிறது அது போலத்தான் காதலும். காதல் பந்திவைத்து அதில் தன்னை இலையாக்கி நம்மையே பரிமாறி உண்டு விடுகிறது. ஆதலால் காதல் செய்வீர் ஏனென்றால் காதல் உலகத்து இன்பத்திற்கெல்லாம் தலைமையானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்று விண்ணில் பாய்கிறது
# இஓஎஸ் -4 செயற்கைக்கோள்!

புதுடில்லி, பெப்.14
புவியைக் கண்காணிப்பதற்கென இஓ எஸ்04 செயற்கைக் கோள் பிஎஸ்எல்வி சி52 ரொக்கெட் இன்று விண்ணில் செலுத்தப்படவுள்ளது.
புவியை கண்காணிக்கவென இஓஎஸ் 04 என்ற அதிநவீன ரேடார் செயற்கை கோளை இஸ்ரோ வடிவமைத்துள்ளது. இது பிஎஸ்எல்வி சி 52 ரொக்கெட் மூலம் இன்று விண்ணில் செலுத்தப்படவுள்ளது. மொத்தம் ஆயிரத்து 710 கிலோ எடையுள்ள இஓஎஸ்04 செயற்கைக் கோளின் ஆயுள்காலம் 10 ஆண்டுகள். இது புவியில் இருந்து 530கி.மீ. உயரத்தில், சூரிய ஒத்திசைவு சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட உள்ளது.
இந்த ரேடார் செயற்கைக் கோள் எல்லைப் பகுதிகளில் கண்காணிப்பு, இராணுவப் பாதுகாப்புக்குப் பயன்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## வேற்றுக்கிரகங்களில் ஏலியன்கள் இல்லை
### விஞ்ஞானிகள் தகவல்

விண்வெளியில் ஏலியன்கள் எனப்படும் வேற்றுக்கிரகவாசிகள் இருப்பதற்கான ஆதாரங்கள் இல்லை என அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.
விண்வெளியில் பிறகோள்களில் ஏலியன்கள் எனப்படும் வேற்றுக்கிரகவாசிகள் இருக்கின்றன என்று அவ்வப்போது தகவல்கள் பரவுகின்றன.
இந்த நிலையில், ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் வேற்று கிரகவாசிகள் குறித்து ஆராய்ச்சியில் ஈடுபட்டனர்.
அதில், மிக சக்தி வாய்ந்த ரேடியோ டெலஸ்கோப் மூலம் ஆய்வு செய்தனர். இதன் முடிவில், ஏலியன்கள் இருப்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## 100சதவீத இருக்கைகளுடன் திரையரங்குகளுக்கு அனுமதி

சென்னை, பெப்.14
இந்தியாவில் 50 சதவீத இருக்கைகளுடன் திரையரங்குகள் இயங்கி வந்த நிலையில், தற்போது 100 சதவீத இருக்கைகளுடன் இயங்க தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது.
இந்த நடைமுறை எதிர்வரும் 16ஆம் திகதி முதல் நடைமுறையாகும் எனதமிழக அரசு மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

## மரண அறிவித்தல்



### திருமதி மயில்வாகனம் பொன்னம்மா

மீசாலை வடக்கு, மீசாலை சியாமிளா மில் வீதியைச் சேர்ந்த திருமதி மயில்வாகனம் பொன்னம்மா நேற்றுமுன்தினம் (12.02.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் நல்லதம்பி மயில்வாகனத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், சிவப்பிரகாசம் (ஓய்வுபெற்ற இலங்கை மின்சாரசபை ஊழியர்) அவர்களின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், உதயகுமார், (லண்டன்), உதயமலர், உதயராணி, சிவகுமார் (நிசார்), சசிகுமார் (சுவிஸ்), கருணகுமார் (பிரான்ஸ்), ஆனந்தகுமார், சசிகரன் (லண்டன்), தர்சினி (பிரான்ஸ்), தனுசா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவரஞ்சினி (லண்டன்), ரவிக்குமார், காலஞ்சென்ற மதிவதனராசா, இளவேணி, சங்கீதா (சுவிஸ்), சர்மிளா (பிரான்ஸ்), நிதி, காயத்திரி (லண்டன்), கேசவன் (பிரான்ஸ்), கலைவானன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.02.2022) செவ்வாய்க்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு முற்பகல் 11.00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 923 9286
077 943 5011

தகவல்:
குடும்பத்தினர்

(Cr37570 (3.6)

## தமிழ்ப் பெண்ணை மணமுடிக்கிறார் மக்ஸ்வெல்
### வைரலாகும் திருமணப் பத்திரிகை



அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் மக்ஸ்வெல், வினிராமன் என்ற தமிழ்ப் பெண்ணைக் கரம்பிடிக்கவுள்ளார்.
தமிழ்ப் பாரம்பரிய முறைப்படி அச்சுக்கப்பட்ட அவர்களது திருமண பத்திரிகை தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது. அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் கிளென் மேக்ஸ்வெல். இவர் ஐபிஎல் போட்டித் தொடரில் பெங்களூர் அணிக்காக விளையாடி வருகிறார்.
இந்த நிலையில் கிளென் மேக்ஸ்வெல் - வினிராமன் திருமணம் எதிர்வரும் மார்ச் மாதம் 27ஆம் திகதி நடைபெறவுள்ளது.
வினி ராமன் தமிழகத்தைச் சேர்ந்த பெண் என்பதால் அவர்களது திருமண அழைப்பிதழ் தமிழ் முறைப்படி மஞ்சள் பத்திரிகையாக அச்சிடப்பட்டுள்ளது. தற்போது இந்த அழைப்பிதழ் இணையத்தில் வைரலாகி வருகிறது. (ச-இ)

## இன்றைய நாள் (ராசிபலன்)

மேடம்: புதிய வாய்ப்பு கிடைக்கக் கூடும். தர்ம சிந்தனை அதிகரிக்கும். புதிய பதவிகள் உங்களைத் தேடி வரும். மகிழ்ச்சி கூடும். அதிகம் கோபப்பட வேண்டாம். உங்களின் புகழ் கூடும். குழந்தைகள் பாசமாக இருப்பர்.

இடபம்: பணியிடத்தில்அதிகாரிகளின் ஆதரவு நன்கு கிடைக்கும். இன்று எதிலும் வெற்றி பெறுவீர்கள். பக்குவமாகப் பேசி நன்மை காண்பீர்கள். குழப்பங்கள் தீரும்.

மிதுனம்: சுற்றுலா, வழிபாட்டுத் தலங்களுக்கு செல்வதில் தடை வரும். கலைத்துறையினருக்கு முன்னேற்றம் உண்டு. மகிழ்ச்சி கூடும். பணியாளருக்கு பொறுப்புக்கூடும்.

கடகம்: தாய் வழி உறவினர்களுடன் நெருக்கம் அதிகரிக்கும். இன்று சிறிய அளவில் மருத்துவ செலவு ஏற்படக்கூடும். வெளியூர், வெளிநாட்டில் இருந்து நல்ல செய்தி வரும்.

சிம்மம்: உங்களுக்கு தலைமைப் பொறுப்பு கிடைக்கும். தன்னம்பிக்கை கூடும். எதிரிகளைப் பற்றிய கவலையும் பயமும் தீர்ந்து நிம்மதி வரும். சரியான பாதையை கண்டுகொள்வீர்கள்.

கன்னி: பொழுது போக்கு அம்சங்களில் கவனத்தை குறைப்பது நல்லது. உங்களின் புகழ் கூடும் வகையிலான நடவடிக்கைகளில் ஈடுபடுவீர்கள். குழந்தைகள் பெருமை தரும் செயல்களை செய்வார்கள்.

துலாம்: வீடு வாங்கும் யோகம் உண்டு. நீண்ட நாள் பிரச்சினை தீரும். உங்களின் புகழ் கூடும். நட்பு வட்டம் விரிவடையும். குடும்பத்தில் வசதி வாய்ப்பு பெருகும். உங்களின் முகப்பொலிவு கூடும்.

விருச்சிகம்: தந்தை வழி சொத்து உங்களுக்கு கிடைக்கும். மகிழ்ச்சி கூடும். பேச்சிலும் செயலிலும் நிதானம் தேவை. யாரையும் நம்பாதீர்கள். பெரியோர், ஆன்மிகவாதிகளின் ஆசிகள் உங்களுக்கு கிடைக்கும்.

தனுசு: மகன் அல்லது மகளுக்கு உயர்கல்வி யோகம் உண்டாகும்.வசதி வாய்ப்புகள் கூடும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். மாணவர்கள் சிலருக்கு வெளிநாடு சென்று படிக்க வாய்ப்பு வரும்.

மகரம்: புதிய வேலை உங்களைத் தேடி வரும். பேச்சில் கவனம் தேவை. வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவீர்கள். எதிர்பார்த்த கடன் கிடைக்கும்.


கும்பம்: வீடு கட்டும் வேலை இன்று நல்ல முறையில் தொடங்கும். புதிய பொறுப்பு காரணமாக உங்களுக்கு சாப்பிடக்கூட நேரம் இருக்காது. பொருளாதார நிலை உயரும். செயலில் கவனம் தேவை.

மீனம்: மகன் அல்லது மகளுக்கு நல்ல வரன் கிடைக்கும். மகிழ்ச்சி கூடும். மனதில் இருந்த குழப்பம் நீங்கும். பணவரவு அதிகமாகும். தடைகள் நீங்கும். தொழிலில் லாபம் வரும். மகிழ்ச்சியான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூமணியம்மா அறக்கட்டளையின் இலங்கைக் கிளையால், ஆனைக்கோட்டை சாவக்காட்டுப் பகுதியில் வசிக்கும் பொருண்மியம் நலிந்த 45 குடும்பங்களுக்கு புலம்பெயர்ந்தவர்களின் நிதியில் ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ரி1)



74 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ். போதனா மருத்துவமனை நிர்வாகத்தால் முன் வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக மருத்துவமனையின் குருதி வங்கியில் நிலவுகின்ற குருதித் தட்டுப்பாட்டை கருத்திற் கொண்டு இயக்கச்சி பிரதேசத்தில் அமைந்துள்ள 552 ஆவது காலாட் படைப்பிரிவுத் தலைமையகத்தில் இராணுவ வீரர்களால் குருதித்தானம் செய்யப்பட்டது. குருதிக்கொடை நிகழ்வில் 55 ஆவது காலாட் படைப்பிரிவின் கீழ் காணப்படுகின்ற ஏனைய படைப்பிரிவுகளில் சேவையாற்றுகின்ற 120 இற்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் கலந்து கொண்டனர். (ய)



கிளிநொச்சி- விசுவமடுவில் அமைந்துள்ள விக்டோரி கல்வி நிலையத்தின் மாணவர்கள் கல்விச் சுற்றுலாவுக்காக திருகோணமலைக்கு நேற்று முன்தினம் சென்ற போது திருகோணமலை பொது நூலகத்தை பார்வையிட்டனர். (ரி1-40)



கைதடி குருசாமி வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றி இடமாற்றலாகிச் சென்ற ஆசிரியர் செ. துவாரகனுக்கு பிரிவுபசார விழா அண்மையில் இடம்பெற்றது. ஆசிரியர் நலன்புரிக் கழகத்தலைவர் க. இந்திரராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அதிபர் ந.ஜெயரூபன் அன்பளிப்பு வழங்கி கௌரவித்தார். (ய-159)



## சட்டத்தரணிக்கு பிரிவுபசாரம்

மன்னார்,பெப்.14

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின், மன்னார் பிராந்திய காரியாலயத்தின் விசாரணை அதிகாரியாகவும், அண்மையில் பதவி உயர்வு பெற்று திருகோணமலை மாவட்ட மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்தியப் பணிப்பாளராகவும் கடமையாற்றி வருகின்ற சட்டத்தரணி வசந்தராஜா தனது உயர்கல்வி நடவடிக்கைக்காக இத்தாலிக்குப் பயணிக்கவுள்ளார்.

அவருக்கான பிரிவுபசார விழா, மன்னார் நகரில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது.

நிகழ்வில் சட்டத்தரணி வசந்தராஜா கௌரவிக்கப்பட்டார். சிவில் சமூக பிரதிநிதிகள் மற்றும் சட்டத்தரணிகளால் நினைவுப்பரிசும் அவருக்கு வழங்கப்பட்டது. (4-56)



ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி முன்பள்ளி மாணவர்களின், வருடாந்த 'சிறுவர் சந்தை' அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. (ம)





## சிறுவர் பாடசாலைக்கு நிதி உதவி வழங்கல்

முல்லைத்தீவு, பெப். 14

முல்லைத்தீவு- முள்ளியவளையில் அமைந்துள்ள சிறுவர் பாடசாலைக்கு ஈரோஸ் அமைப்பால், ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதி உதவி வழங்கப்பட்டது.

நிகழ்வில் ஈரோஸ் அமைப்பின் தலைவர் துஸ்யந்தன், அமைச்சர் நாமல் ராஜபக்சவின் இணைப்பாளர் க.நிரோஸ்குமார், பிரதேசசபை உறுப்பினர் சசிதரன் உட்படப் பலர் கலந்து கொண்டு நிதியுதவியை வழங்கினர். (ரி1-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில்

# ஊடகர்களைக் கட்டுப்படுத்த பயங்கரவாதத் தடைச்சட்டம்

### ஐரோப்பிய ஒன்றியத்துக்கு சிவில் அமைப்புகள் கடிதம்

**கொடிகாமம், பெப். 14**

**இலங்கையில் சிவில் செயற்பாட்டாளர்கள் ஊடகவியலாளர்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பயங்கரவாதத் தடைச்சட்டம் பயன்படுத்தப்படுகிறது - என்று சிவில் அமைப்புக்கள் ஐரோப்பிய ஒன்றியத்துக்குக் கடிதம் அனுப்பியுள்ளன.**

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது:

பயங்கரவாதத் தடைச்சட்டம் சிவில் அமைப்புக்களின் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களைக் கட்டுப்படுத்துவதற்கு இலங்கையில் வெகுவாகப் பயன்படுத்தப்படுகின்றது.

இலங்கை அரசாங்கத்தினால் அண்மையில் வெளியான பயங்கரவாதத் தடைச்சட்டத் திருத்தம் எம்மால் முன்மொழியப்பட்ட திருத்தங்களை இன்னும் நிவர்த்தி செய்யவில்லை. பயங்கரவாதத் தடைச்சட்டம், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்குப் பின்னர் தமிழர்களுக்கும், பின்னர் முஸ்லிம்களுக்கும் எதிராகவும் இப்போது எதிர்ப்பாளர்களுக்கு எதிராகவும் வரலாற்று ரீதியாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கான எங்கள் கோரிக்கையை மீண்டும் வலியுறுத்துகிறோம். பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் மோசமாக பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் சமூகங்களின் கோரிக்கைகளுக்கு இணங்க பிணைச் சட்டத்தின் கீழ் தகுதி பெறாதவர்களைத் தவிர, அனைவரையும் பிணையில் விடுவிக்கவும், வாக்குமூலம் முதன்மையான அல்லது ஒரே ஆதாரமாக இருக்கும் வழக்குகளை நிறுத்தவும் அரசாங்கத்தை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்

குறிப்பாக கடந்த இரண்டு வருடங்களில், சிவில் சமூகம், மனித உரிமைப் பாதுகாவலர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள், குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் உள்ளவர்களை பயங்கரவாத தடுப்பு பிரிவினர் அவர்களின் அலுவலகங்களுக்குச் சென்று அவர்களைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்க பயங்கர வாதத் தடைச்சட்டம் பயன்படுத்தப்படுகிறது.

ஏற்கனவே பாகுபாடு காட்டப்பட்ட மற்றும் ஒதுக்கப்பட்ட சமூகங்களுக்கு மேலும் பாதுகாப்பின்மையை உருவாக்குவதன் மூலம் தேசிய பாதுகாப்பை அடைய முடியாது.

ஆகவே பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் பொதுப் பாதுகாப்பு சட்டக் கட்டமைப்பு இலங்கையில் திறம்பட மேற்கொள்வதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாமற் செய்ய அழைப்பு விடுக்கிறோம் - என்றுள்ளது. (ம-159)



## தென்கிழக்கு பல்கலையின் பொதுபட்டமளிப்பு விழா

அம்பாறை, பெப். 14

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 14ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா கடந்த வியாழக்கிழமையுடன் நிறைவடைந்தது.

பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி றமீஸ் அபூபக்கர் தலைமையில், பல்கலைக்கழக ஒலுவில் வளாக மாநாட்டு மண்டபத்தில் கடந்த 7ஆம் திகதி திங்கட்கிழமை பட்டமளிப்பு விழா ஆரம்பமானது.

தினமும் இரு அமர்வுகளாக நான்கு தினங்கள் நடைபெற்ற இந்தப் பொதுப்பட்டமளிப்பு விழாவில் மொத்தமாக 2 ஆயிரத்து 621 மாணவர்கள் பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

பட்டமளிப்புவிழா நடைபெற்ற நான்கு தின அமர்வுகளிலும் முறையே கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா, உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம். திலீப் நவாஸ், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் சம்பத் அமரதுங்க, றுகுணு பல்கலைக்கழக பேராசிரியரும், இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கைத் திட்ட தலைவருமான காமினி சேனநாயக்க ஆகியோரின் சிறப்புரைகள் இடம்பெற்றன. (வ-30)

## குமாரபுரம் படுகொலை

# நினைவேந்த முயன்ற மக்களுக்கு புலனாய்வாளர்களால் அச்சுறுத்தல்

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடும் கண்டனம்

திருகோணமலை, பெப். 14

குமாரபுரம் படுகொலையை நினைவேந்த முயன்ற மக்களுக்கு புலனாய்வாளர்கள் அச்சுறுத்தல் விடுத்தமைக்கு தமிழ்த் தேசியமக்கள் முன்னணி கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரதிப் பொதுச் செயலாளர் இ.ஸ்ரீஞானேஸ்வரன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

குமாரபுரம் படுகொலையின் 27ஆம் ஆண்டு நினைவு தினத்தை கடைப்பிடிக்க முற்பட்ட கிராமமக்கள் தொடர்ச்சியான அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். கொல்லப்பட்ட மக்களின் உறவினர்களைக் கடந்த 10ஆம் திகதி சந்தித்த புலனாய்வாளர்கள், நினைவேந்தலுக்கு நீதிமன்ற தடை உத்தரவு பெறப்பட்டுள்ளது எனவும், நினைவேந்தினால் கைது செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அச்சுறுத்தியுள்ளனர்.

ஒரு சிலரது பெயர் களை குறிப்பிட்டு, அவர்களை நினைவேந்தப்போக வேண்டாம் எனவும் அச்சுறுத்தியுள்ளனர். இதனால் சில உறவினர்கள் பயத்தில் நினைவேந்தலில் கலந்து கொள்ளவில்லை. இவ்வாறான அச்சுறுத்தல்கள் ஒருபோதும் தமிழினத்தை நிம்மதியான வாழ்வுக்கு இட்டுச்செல்லாது.

சர்வதேச விசாரணையூடாக தமிழருக்கான நீதி கிடைக்கும்வரை தமிழ் மக்கள் தமது உரிமைகளை நிலைநாட்டப் போராட வேண்டியிருக்கும். நினைவேந்தலுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட விடயத்தை உரிய சான்றுகளுடன் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளருக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்போம் - என்றுள்ளது. (வ-40)

# நன்றி மறந்தவர் பஸில் ராஜபக்ச

### முருத்தெட்டுவ தேரர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 14

ராஜபக்ச குடும்பத்தில் நன் றியை மறக்காத ஒரே நபர் மஹிந்த ராஜபக்சவே. பஸில் ராஜபக்ச செய்நன்றி மறந்தவர் என்பதால், அவரை பற்றி பேசுவதற்குகூட விரும்பவில்லை.

இவ்வாறு நாரஹென்பிட்டி அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார். இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தற்போதைய அரசை ஆட்சிக்கு கொண்டு வர முன்நின்று செயற்பட்ட விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோருக்கு எதிராக அரசாங்கத்துக்குள் நடக்கும் செயற்பாடுகள் நன்றிகெட்ட செயல்.

இவர்களை அரசாங்கத்தில் இருந்து நீக்கினால். அரசாங்கத்தின் பயணமும் முடிவுக்கு வந்து விடும்.

அதேபோல தற்போது பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள சமன் ரத்னபிரிய, நான் தலைவராக பதவி வகிக்கும் அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தில் இருந்து நீக்கப்பட்ட நபர். சமன் ரத்ன பிரிய பாம்பை போன்றவர் - என்றார். (எ-இ)



## பேராசிரியர் தில்லைநாதனுக்கு கௌரவ கலாநிதிப்பட்டம்

பேராதனைப் பல்கலைக்கழக தகைமைசார் பேராசிரியர் எஸ்.தில்லைநாதனுக்கு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் கௌரவ இலக்கிய கலாநிதிப்பட்டம் வழங்கி கௌரவமளித்துள்ளது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 14ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவின் மூன்றாம் அமர்வில் குறித்த கௌரவ இலக்கிய கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்டது.

தென்கிழக்குபல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி ரமீஸ் அபூபக்கர் இந்தக் கௌரவத்தை பட்டமளிப்பு விழா அமர்வில் பிரகடனம் செய்து பேராசிரியர் தில்லைநாதனுக்கு சம்பிரதாயபூர்வமாக வழங்கினார். இதேவேளை பட்டமளிப்பு விழாவின் இறுதி அமர்வில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் பதிவாளர் ஜெளபர் சாதிக் கௌரவ கலாநிதி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். (வ-30)



## வீதி அபிவிருத்திக்காக அடிக்கல் நடும் நிகழ்வு

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கோயிற்குடியிருப்பு கிராமத்தில் கொங்கிறீற் வீதிகளாக மாற்றுவதற்கு தெரிவு செய்யப்பட்ட வீதிக்கு கடந்த வியாழக்கிழமை அடிக்கல் நடுகை செய்யப்பட்டது. வீதிக்கான அடிக்கல்லை நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் பிரதிநிதியும், சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினருமான தி.தங்கவேலு நடுகை செய்தார். கிராமிய வீதிகளை கொங்கிறீற் வீதிகளாக மாற்றியமைக்கும் திட்டத்தின் கீழ் 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் குறித்த வீதி புனரமைக்கப்படவுள்ளது. (ம-ரி,159)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



தோற்றம் 28 . 11 . 1928

மறைவு 13 . 02 . 2022

## நாகலிங்கம் நடராசா

(சாஸ்திரி ஆசாரியார்)

மூளாயைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டை மூளாய் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் நடராசா நேற்று (13.02.2022) ஞாயிற்றுக்கிழமை இயற்கையெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், இராசம்மா அவர்களின் அன்புக் கணவரும், அருளாளன், சர்வேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், தாரணி, புவனேஸ்வரன் ஆகியோரின் மாமனாரும், அனாகன், அனாயினி, அனாளன், குகாயினி, ஹரிஸ்ராம், சிவாஜினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2022) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மூளாய் பித்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

மூளாய் வீதி,
வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்
077 667 9506

(cr37571) (2.6)

# மரண அறிவித்தல்



பிறப்பு 10 . 03 . 1941

இறப்பு 13 . 02 . 2022

## சின்னத்துரை இரத்தினம்

சுன்னாகம், வெளிப்புலத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை இரத்தினம் அவர்கள் நேற்று (13.02.2022) ஞாயிற்றுக் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கையாலயர் முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும், சிறீஸ்கீதா (பிரான்ஸ்), கோகிலதாசன் (கொலண்ட்) காலஞ்சென்ற நிரஞ்சன் மற்றும் தாமரைக்கண்ணன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளு மாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 42901) 1/6

# மரண அறிவித்தல்

## திருமதி சாரதாதேவி ஸ்ரீவாமதேவன்



ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாரதாதேவி ஸ்ரீவாமதேவன் அவர்கள் நேற்று (13.02.2022) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேந்திரம் அன்னமுத்து தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற பண்டிதர் பொன்னுத்துரை சரசாம்பிகை தம்பதியரின் மூத்த மருமகளும், பொன் ஸ்ரீவாமதேவன் (ஓய்வுநிலை சங்கீத ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி வாமினி பிரதீப் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், சாவகச்சேரி) அவர்களின் அன்புத் தாயாரும், திரு. மகாலிங்கம் பிரதீப் (முகாமையாளர், சம்பத் வங்கி, சாவகச்சேரி) அவர்களின் பாசமிகு மாமியாரும், செல்வன் டனிஷ், விகாஷ் (சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்கள்) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், காலஞ்சென்ற சகுந்தலாதேவி மற்றும் சறோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கோபாலபிள்ளை மற்றும் குருதேவன், குகதாஸ் (பொறியியலாளர்-லண்டன்), வாசுகி (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும், திரு.திருமதி மகாலிங்கம், கிருபைநாயகி ஆகியோரின் சம்பந்தியும், சசிகரன் (சுவிஸ்), சுதாகரன் (பிரான்ஸ்), ரூபாகரன் (வனிக்கா மெடிக்கல், யாழ்ப்பாணம்), செந்தூரன் பிரபாலினி ஆகியோரின் சித்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2022) திங்கட் கிழமை மட்டுவில் தெற்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மதியம் 1.00 மணியளவில் குச்சப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
பொன் ஸ்ரீவாமதேவன் (கணவர்)
0777 110 375
திருமதி பிரதீப் வாமினி (மகள்)
077 2353 423

(CS 18557)1-6

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பத்தொன்பதாவது பிறந்தநாள் நினைவும் ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலியும்

மண்ணில்
14
•
02
•
2003



விண்ணில்
03
•
03
•
2017

## அமரர் தவத்துரை ஹரிஷன்

(யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவன்)



ஆண்டுகள் ஐந்து ஓடி விட்டதே
அன்புச் செல்லமே நீ எமை விட்டுப்பிரிந்து
கண்ணை இமை காப்பது போல்
கண்ணுக்குள் உன்னை வைத்து
அல்லும் பகலும் பாதுகாத்து
வளர்த்து வந்த போதிலும்
கொடிய காலனவன் டெங்கு எனும்
கொடிய நோயைத் தந்து
உன்னை ICU வாட்டினுள்
தனிமைப் படுத்தி எம்மிடமிருந்து
பறித்துவிட்டான்
பாடசாலை ரியூசன் தவிர்ந்த
மற்ற வேளை யெல்லாம்
எம் கண் வட்டத்துக்குள்
எப்போதும் வைத்து
காத்து வந்த போதும்
கூற்றுவன் செய்த சதியால்
சடுதியில் எம்மை விட்டு
பிரிந்து விட்டாய் எம் செல்வமே!
ஹரிஷன் என்றால்
எல்லோருக்கும் பிடிக்கும்
உன் அன்பான பேச்சும்
பண்பான நடத்தையும்
கள்ளம் கபட மற்ற புன் சிரிப்பும்
ஒரு நொடியில் மறைந்து விட்டதே
எல்லோரையும் கவர்ந்த உன்னை
காலனுக்கும் பிடித்துவிட்டதுபோலும்
அதுதான் உன் மீது மையல் கொண்டு
இச்சிறு வயதில் உன்னை
தன்னகத்தே அழைத்துவிட்டான்
பள்ளியில் உன்னுடன் படித்த
சக மாணவர்களை காணும்
போதெல்லாம் என் மனம் படும்
வேதனைகள் சொல்லில் அடங்காது
ஆறு மணியானதும் "சிச்சு" தனிய என
அவ வீட்டிற்கு ஓடிப் போய்
அவரோடு துணை யிருப்பாய்
ஒன்பது மணியானதும்
அம்மாவும் தங்கையும் தனிய என
ஓடோடி வந்து
ஆண் பிள்ளை நான் தான்
உங்களுக்கு காவல் என செல்லுவாய்
இப்போது அம்மாவும் உன் தங்கையும்
எப்போதும் தனித்திருந்து
தவியாய் தவிப்பது தெரியவில்லையா
கண்ணிமைக்கும் பொழுதினில்
நடந்த இக்கொடுமை
கனவாகிப் போகாதா என
மனம் ஏங்கித் தவிக்கிறது
உன் மேனி எம்மை விட்டுப்
பிரிந்தாலும்
உன் ஆன்மா எம்மில்
கலந்து விட்டது.



**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

**என்றும் உன் நினைவால் வாடும்**
**அப்பா, அம்மா, தங்கை**
**மற்றும் உறவினர்கள்.**

(cs.18697) (2.6)

# Jaffna College Alumni Association
## Call for Nominations
## Post: Alumni Representative to the Board of Directors

Jaffna College Alumni Association (JCAA) calls for nominations for the post of Alumni Representative to the Board of Directors of Jaffna College.

A nominee who satisfies the eligibility criteria specified in the Constitution of the JCAA will be elected through ballot as Alumni Representative as provided in the Constitution.

All nomination forms must bear the consent signature of the nominee and be proposed and seconded by two members on the electoral roll. Nomination forms, the electoral roll and the constitution of the JCAA can be obtained by sending a request to the Secretary of the JCAA at the email address **jcalumniparentbody.vk@gmail.com**

From the 7th of March 2022, nomination forms can be obtained from the Main Office of Jaffna College as well. The electoral roll and the Constitution of the **JCAA** will be available for viewing at the Main Office of Jaffna College from the 7th of March 2022.

Duly completed nominations should be sent under registered cover marked "NOMINATIONS" so as to reach the Secretary of the **JCAA** at the address given below **on or before the 28th of March 2022:**

**M. Thiruvarangan**
**Secretary,**
**Jaffna College Alumni Association,**
**Jaffna College,**
**Vaddukoddai,**
**Jaffna.**

M. Thiruvarangan
Returning Officer & Secretary/JCAA
14 February 2022
Contact Number: 077 714 9231

(cs.42869) (2.6)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
23
•
11
•
1949

உதிர்வு
25
•
02
•
2021

கடந்த 25.02.2021 அன்று சிவபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் திரு. செல்லையா மகாதேவா

கரை புரண்ட அன்பைத் தேக்கி
கண்டிப்பு என்ற வரம்பைக் கட்டி
வாழும் கலையை வாழ்ந்து காட்டி
உயரிய லட்சியத்தை சொல்லி
உலகில் உத்தமராய் வாழச் செய்த
பெருந்தகையே உங்களை இழந்து
ஆண்டு ஒன்று ஆனாலும் எம்
கண்களில் கரையில்லா வெள்ளம்
கரை காணவில்லை.உங்கள்
ஆத்மா சிவன் பாதம் சேர பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவு தின நிகழ்வு இன்று (14.02.2022) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

130, யாழ்வீதி,
யாழ்ப்பாணம்.

(cs.42879) (2.6)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழிவாங்கமாட்டேன்...

தில் வடமராட்சி கிழக்கு மீனவர் சமாசத்துக்கு 9 பேரை நியமித்துள்ளார்.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் மீனவர் பிரச்சினை தொடர்பில் ஆராயும் கூட்டத்தை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுக் கூட்டியிருந்தார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக வடமராட்சி மீனவர்கள் முன்னெடுத்த போராட்டம், இதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சென்றபோது எதிர்ப்பு வெளியிடப்பட்டமை ஆகிய விடயங்களின் பின்னணியில் நேற்றைய கூட்டம் நடைபெற்றிருந்தது.

இந்தக் கூட்டத்தின்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ், நான் கட்டாயம் போராட்டத்துக்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. நியாயமான போராட்டம் என்பதால் சென்றேன். நான் யாருக்கும் பயப்படத் தேவையில்லை.

கடற்றொழில் திணைக்களம் மற்றும் சமாசங்களின் நியாயமான கருத்துக்களுக்கு கட்டுப்படாத சங்கங்களின் அனுமதியை இரத்துச் செய்யுமாறு நான் பணித்துள்ளேன். நான்தான் கடற்றொழில் அமைச்சர். அது தொடர்பில் பார்த்துக்கொள்வேன்.

எனக்கு பழிவாங்கும் எண்ணம் இல்லை. ஏனெனில் நான் பிரபாகரனையே (தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்) பழிவாங்காதவன். சுப்பர்மடம் சங்கத்தை பழிவாங்குவேன் என்று நினைக்க வேண்டாம்.

வடமராட்சி கிழக்கில் 9 பேர் கொண்ட புதிய சமாசத்தை அமைத்துள்ளேன். இவர்கள்தான் சமாசம்.

அதேபோல் தடை செய்யப்பட்ட தொழில் எதுவென சங்கங்கள் கூடி ஆராய வேண்டும். எவை தடை செய்யப்பட்ட தொழில் என்று எழுத்து மூலமாக எனக்கு தர வேண்டும் - என்றார். (அ-ஔ-26)

## மின்விநியோகத்தை...

அதேவேளை, வர்த்தக நிலையங்களுக்கு வழங்கப்படும் மின்சாரத்தை குறைத்து பொதுமக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்- இவ்வாறு பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்தார்.

'நீர்த்தேக்கங்கள் சிலவற்றில் காணப்படும் நீர், மேலும் இரு வாரங்கள் அல்லது ஒரு மாதத்துக்குத் தேவையான மின்சார உற்பத்திக்கு மாத்திரமே போதுமானது. எனவே மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்தவேண்டும்' என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை எதிர்காலத்தில் 6 மணி நேர மின்வெட்டை தவிர்க்க முடியாது என்று மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஔ-இ)

## மித வேகக்...

மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் பரவலாக கிடைத்துக் கொண்டிருக்கும் மழை இன்று பிற்பகல் முதல் படிப்படியாக குறைவடையும்.

ஆனால் எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை வங்காள விரிகுடாவில் ஒரு புதிய தாழமுக்கம் உருவாகுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இதனால் எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை முதல் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் பரவலாக மிதமானது முதல் கனமழை வரை கிடைக்க வாய்ப்புள்ளது.

நெல், வெங்காயம் மற்றும் உளுந்து போன்ற பயிர்களின் அறுவடைச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் விவசாயிகள் எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக அவற்றை மேற்கொள்வது சிறந்தது.- என்று குறிப்பிட்டுள்ளார். (அ-ஔ-5)

## உளுந்து,...

மாவட்டத்தில் நிலக்கடலையும் அறுவடையில் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன. அத்துடன் அறுவடைக்குத்தயாரான பயிர்கள் மழையால் நாசமாகியுள்ளன.

இலங்கையில் அதிக உளுந்து உற்பத்தி மாவட்டங்களில் ஒன்றாகிய வவுனியா மாவட்டத்தில் உளுந்து அறுவடை தற்போது இடம்பெற்று வருகின்றது. வவுனியாவில் கடந்த சில நாள்களாக பெய்து வரும் மழையால் உளுந்து அறுவடையை மேற்கொள்ள முடியாமல் விவசாயிகள் திணறுகின்றனர். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் விதைத்து 3 மாதமாக காத்திருந்து, அறுவடைக்கு தயாரான உளுந்துப் பயிர்கள் மழை காரணமாக பாதிப்படைந்து வருகின்றன. இதனால் பலரும் அறுவடையை மேற்கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சுதந்திரபுரத்தில மாத்திரம் மழை காரணமாக 600 ஏக்கர் நிலக்கடலைச் செய்கை அழிவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஔ-19)

## மன்னிப்புக்...

மக்கள் முன்னணியின் செயலரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் மன்னிப்புக் கோரியுள்ளார்.

தொலைக்காட்சி விவாதம் ஒன்று நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது. ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனுடன், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனும் பங்கேற்றிருந்தார்.

விவாதத்தின்போது, தமிழீழ விடுதலைப் புலிகள், தனி நாட்டுக்காகப் போராடவில்லை என்றும் தமிழ்த் தேசத்தின் அங்கீகாரத்துக்காகவே போராடினார்கள் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்துக்கு பல்வேறு தரப்புக்களிடமிருந்தும் எதிர்ப்பு வெளியாகியிருந்த நிலையில், தனது முகநூல் பக்கத்தில் தன்னிலை விளக்கமளித்துள்ள கஜேந்திரன்,

விவாதத்தில் என்னுடன் பங்குகொண்டிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பைச் சேர்ந்த சுரேஷ் பிரேமச்சந்திரன், விடுதலைப் புலிகள் இயக்கம் தனிநாட்டுக்காக போராடி எதனையும் சாதித்திருக்கவில்லை என்றும், தமிழர்கள் தேர்தல்களில் ஆணை வழங்கிய, தமிழ் மக்களது இருப்புக்கு குறைந்தபட்ச பாதுகாப்பையாவது வழங்கக்கூடிய தேசம் அங்கீகரிக்கப்பட்ட, சுயநிர்ணய உரிமையுடன் கூடிய நாம் வலியுறுத்தும் சமஷ்டிக்கும் வழி வரைபடம் இல்லை என்றும் கூறி மக்கள் மனதில் அவநம்பிக்கையை ஏற்படுத்தி, இருப்பதனையாவது தக்க வைக்க வேண்டும் என்ற போர்வையில் 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு ஆறு கட்சிகள் கூட்டாக கோரும் துரோக நடவடிக்கையை நியாயப்படுத்துவதற்கு முயன்றிருந்தார்.

இந்நிலையில் விடுதலைப் புலிகள் இயக்கம் பேச்சு மேசையில், ஏற்றுக்கொள்ளக் கூடிய நியாயமானதும் சாத்தியமானதுமான தீர்வை பரிசீலிப்பதற்கு தயாராகவே இருந்தார்கள் என்ற உண்மையை பதிவு செய்யவேண்டிய கடமையும் பொறுப்பும் எனக்கு ஏற்பட்டது.

அந்தவகையில் விடுதலைப் புலிகள் தமிழீழத்துக்காக போராடி வந்த நிலையில் அரசுடன் நேரடியாக இடம்பெற்ற பேச்சுக்களிலும் சர்வதேச மத்தியஸ்தத்துடன் இடம்பெற்ற பேச்சுக்களின்போதும் தமிழ்த் தேசத்தின் இருப்பைப் பாதுகாக்கக்கூடிய தீர்வை அரசுத்தரப்பு முன்வைத்தால் பரிசீலிக்கத் தயாராக இருந்தார்கள் என்ற உண்மையை வெளிப்படுத்த முற்பட்ட வேளையில், நான் கூறிய கருத்துக்கள், விடுதலைப் புலிகள் தனிநாட்டுக்காக போராடவில்லை என தவறாக அர்த்தப் படுத்துவதற்கு ஏதுவாக அமைந்திருந்தன. தெளிவற்ற வகையில் அந்தக்கருத்து வெளிவந்தமைக்காக நான் மனம் வருந்துகின்றேன். அதன் காரணமாக மனவேதனைக்கும், மனவுளைச்சலுக்கும் உள்ளான தமிழ்த் தேசியப் பற்றாளர்களிடம் நான் மன்னிப்புக்கோருகின்றேன்= என்று பதிவிட்டுள்ளார். (அ-ஔ-5)


## துயர் பகிர்கின்றோம்

எமது இசையாசிரியர் கழக அங்கத்துவ ஆசிரியை திருமதி ரஜீதா சுந்தரகுமார் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி சாந்தநாயகி விநாயகமூர்த்தி

அவர்கள் கடந்த (24.12.2021) அன்று இறைபதம் அடைந்தார். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

யாழ் கல்வி வலய
இசையாசிரியர் கழகம்.

(CS 18558)1-6

## கண்ணீர் அஞ்சலி



மலர்வு 01.01.1934
உதிர்வு 12.02.2022

எமது பாடசாலை ஆசிரியர்

திருமதி விமலா ஸ்ரீரவிகுலன்

அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி ஏரம்பமூர்த்தி தங்கம்மா

அவர்கள் கடந்த (12.02.2022) சனிக்கிழமை இறைபதம் அடைந்தையிட்டு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.க.

(crs 42662) (2.6)

## மரண அறிவித்தல்

பிறப்பு 31 . 12 . 1969



இறப்பு 12 . 02 . 2022

### இராஜரட்ணம் விஜயசூரியா

(சூரி பத்தர் - மட்டுவில்)

முத்துமாரி அம்மன் கோவிலடி மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் நாச்சிமார் கோவிலடி காங்கேசன்துறை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரட்ணம் விஜயசூரியா (சூரி பத்தர்) நேற்றுமுன்தினம் (12.02.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம் - விஜயலட்சுமி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காந்திமாலாவின் (காந்தி) அன்புக் கணவரும், சிந்துஜன் (Marine Engineering, CINEC), திருஷாந் (St. ohn's College - A/L கலைப்பிரிவு 2022), தனுப்பிரியா (யாழ். இந்து மகளிர் கல்லூரி - A/L கலைப்பிரிவு 2023) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், விஜயரட்ணம், விஜயராசன், விஜயகுமார், விஜயலதா, விஜேந்திரா, விஜய ரூபி ஆகியோரின் சகோதரனும் Dr. ஜெயலனின் (சுஜீவா வைத்தியசாலை) சகலனும் கணேஸ்வரன், பாலமுருகன், பகவதி, ரஜனி, கௌசலா, றஜினா, யசோதா, Dr. சந்திரமாலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2022) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.1091, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

(cr.37572) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்
075421 4529

## வலி.கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளுக்கான வாக்களிக்கத் தகுதியுடைய வாக்காளர் பட்டியல் தொடர்பான அறிவித்தல்

வலி.கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளுக்கான 31.12.2020 ஆம் திகதியுடன் முடிவுறுத்தப்பட்ட வாக்களிக்கத் தகுதியுடைய அங்கத்தவர்களின் பெயர், விவரம் அடங்கிய அங்கத்தவர் பட்டியல் இயங்குகின்ற கிளைகளிலும் கீழ்வரும் இயங்காத கிளைகளுக்கான பட்டியல்கள் சங்கத்தின் தலைமைக் காரியாலயம் மற்றும் கீழ்க்குறிப்பிட்ட இடங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்பதனை அறியத்தருகின்றோம்.

| இயங்காத கிளை இலக்கம் | காட்சிப்படுத்தப்பட்டுள்ள கிளை இலக்கம் |
| --- | --- |
| கிளை - 02 | கிளை இல - 01. அச்செழு |
| கிளை - 07 | கிளை இல - 08. நீர்வேலி கரந்தன் |
| கிளை - 10 | கிளை இல - 09. நீர்வேலி கந்தசாமி கோயிலடி |
| கிளை - 11 | கிளை இல - 08. நீர்வேலி கரந்தன் |
| கிளை - 13 | கிளை இல - 12. கோப்பாய்ச் சந்தி |
| கிளை - 16 | கிளை இல - 15. கோப்பாய் வடக்கு |
| கிளை - 18 | கிளை இல - 33. இருபாலைச் சந்தி |
| கிளை - 20 | கிளை இல - 34. இருபாலை கிழக்கு |
| கிளை - 29 | கிளை இல - 25. உரும்பிராய் வடக்கு |
| கிளை - 31 | கிளை இல - 30. ஊரெழு |

இவ் அங்கத்தவர் பட்டியல்கள் **14.02.2022 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 28.02.2022 ஆம் திகதி** வரை காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் என்பதுடன் மேற்படி அங்கத்தவர் பட்டியல் தொடர்பான திருத்தங்கள், ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் **01.03.2022** ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் சங்கத்தின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறு கேட்டுக்கொள் கின்றோம். பின்னர் வரும் ஆட்சேபனைகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

செயலாளர்
வலி.கிழக்குதென்பகுதி ப.நோ.கூ.சங்கம் (வ-து)

14.02.2022

(cr.37573) (3.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஈஸ்டர் தாக்குதல் விசாரணை அதிகாரி

# தப்பியோடினார் அமெரிக்காவுக்கு!

## பொய்ச்சாட்சிகளை உருவாக்கினாராம்

கொழும்பு, பெப். 14

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பிரதான விசாரணை அதிகாரி நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக பதவி உயர்வு பெற்ற மேற்படி அதிகாரி அமெரிக்காவுக்கு தப்பிச் சென்றுள்ளாரென உளவுத்துறை வட்டாரங்கள் தேசிய பாதுகாப்புச் சபையில் தெரிவித்துள்ளன.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின்போது பெயரிடப்பட்ட சாரா ஜஸ்மின் என்ற புலஸ்தினி மகேந்திரன் மன்னாரில் இருந்து படகில் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றுள்ளார் என ஈஸ்டர் ஆணைக் குழுவுக்கு அறிவித்தது மேற்படி அதிகாரிதான்.

சாய்ந்தமருது குண்டுவெடிப்பில் இருந்து சாரா தப்பிச் சென்றதை தனது உளவாளிகள் இருவர் நேரில் பார்த்தனரெனக் கூறி உளவுத்துறையினரின் சாட்சியத்தை அந்த அதிகாரி ஆணைக்குழுவில் முன்வைத்தார்.

இந்த அதிகாரிதான், சாரா ஜாஸ்மின் பொலிஸ் பரிசோதகரால் அழைத்துச் செல்லப்பட்டாரெனவும் தெரிவித்திருந்தார். இதன்படி, பொலிஸ் பரிசோதகர் அபுபக்கரை மேற்படி அதிகாரி கைது செய்திருந்தார்.

குறித்த விசாரணை அதிகாரி உருவாக்கிய பொய்ச்சாட்சியம் காரணமாகவே, பொலிஸ் பரிசோதகர் அபுபக்கர் இரண்டு ஆண்டுகளாக தடுப்புக் காவலில் இருந்துள்ளார் என்ற உண்மை தற்போது தெரிய வந்துள்ளது. பதவி உயர்வை எதிர்பார்த்தே அவர் இவ்வாறு செய்துள்ளார் என, குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரும் மேற்கொண்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு விசாரணை ஆணைக் குழுவின் நேரில் கண்ட சாட்சிகளின் கூற்றுப்படி, சம்பவம் நடந்தபோது இரண்டு உளவாளிகளும் (ஆணைக் குழுவில் முன் சாட்சியமளித்த) பல மாதங்களாக வவுனியா மற்றும் கிழக்கு மாகாணத்துக்கு வெளியே இருந்துள்ளனர். பின்னர் இரு உளவாளிகளிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது உயிர்த்த ஞாயிறு விசாரணை அதிகாரியின் வேண்டுகோளின் பேரில் பொய்யான சாட்சியங்களை வழங்கியதாக அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

இதன்படி, உயிர்த்த ஞாயிறு விசாரணை ஆணைக்குழுவின் கோரிக்கைக்கு அமைய பொலிஸ் பரிசோதகர் அபுபக்கர் வீணாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பதைத் தெரிவிக்குமாறு பொலிஸ் திணைக்களம் சட்டமா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஆயினும், உயிர்த்த ஞாயிறு விசாரணை ஆணைக்குழுவின் பொலிஸ் அதிகாரி திணைக்களத்துக்கு அறிவிக்காமல் நாட்டைவிட்டுதப்பிச்சென்றுவிட்டார் எனத் தற்போது தெரியவந்துள்ளது. (அ-ஒ-இ)

## 'தேயிலைச் சாயம்' ஒளிப்படக் கண்காட்சி

யாழ்ப்பாணம், பெப். 14

மலையகத்தைச் சேர்ந்த 40 இளையோரால், மலையகத் தமிழ் மக்களின் வாழ்க்கையை பிரதிபலிக்கும் 100 ஒளிப்படங்கள் உள்ளடங்கிய 'தேயிலைச் சாயம்' கண்காட்சி, இன்றும் நாளையும், இல.15 றக்கா வீதியில் அமைந்துள்ள ஓவியக் கூடத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-5)

## யாழ். போதனாவில் எக்ஸ் - ரே இயந்திரம் சேதம் சதியா? என விசாரணை

யாழ்ப்பாணம், பெப். 14

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பொருத்தப்பட்டுள்ள 15 மில்லியன் ரூபா பெறுமதியான எக்ஸ் - ரே இயந்திரம் வேண்டுமென்றே குத்தி உடைக்கப்பட்டதா என்று கண்டறிய பொலிஸ் விசாரணையும், நிர்வாக ரீதியான விசாரணையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அதி நவீன எக்ஸ் கதிர் இயந்திரம் மிக அண்மையில் பொருத்திய நிலையில் அதில் ஓர் முக்கியமான பகுதி 2 வாரங்களுக்கு முன்னர் வேண்டுமென்றே குத்தி உடைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் மருத்துவமனை நிர்வாகத்தால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் முன்பும் ஓர் தடவை இயந்திரத்தின் முக்கிய பகுதி ஒன்று களவாடப்பட்டபோதும் அது இறுதிவரை கண்டறியப்படவில்லை.

இதே நேரம் தற்போது புதிய இயந்திரம் பொருத்தப்பட்டு 4 தினங்கள் மட்டுமே இயங்கிய நிலையில் ஓர் பகுதியில் உடைவு காணப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மருத்துவமனை நிர்வாகம் மேற்கொண்ட முறைப்பாட்டையடுத்து பொலிஸார் தடயவியல் நிபுணர்களின் உதவியுடன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ஒ-5)

### ரஷ்யா - ...

நாடுகளும் இறங்கியுள்ளன.

ஆனால், எந்தச் சமாதானத்தையும் ஏற்காத ரஷ்யா இன்னும் இரண்டே நாள்களில் உக்ரைன் மீது போர் தொடுக்கும் என்று அமெரிக்க உளவு நிறுவனங்கள் கணித்துள்ளன.

**சுவீடன் - டென்மார்க்**

சுவீடனைப் போன்றே பெரும் போர்களில் சம்பந்தப்பட்டிராத டென்மார்க் நாடு அதன் பல நூற்றுக்கணக்கான துருப்பினரை முழுப்போர் ஆயத்த நிலையில் இராணுவ வாடி வீடுகளுக்கு அனுப்பியிருக்கிறது. பனிப் போருக்குப் பிறகு இவ்வாறு ஒரு தயார் நிலை பேணப்படுவது அங்கு இதுவே முதல் சந்தர்ப்பம் ஆகும்.

அதேசமயம் டென்மார்க் மண்ணில் அமெரிக்கத் துருப்புகளும் ஆயுதங்களும் நிலை கொள்வதற்கான அனுமதியை வழங்குகின்ற இராணுவ ஒத்துழைப்பு உடன்படிக்கையை அவசரமாக இந்தவாரம் உறுதி செய்திருக்கிறார் டென்மார்க் பிரதமர்.

**உலகப் போர்**

உக்ரைனில் உள்ள அமெரிக்கர்களை மீட்பதற்குப் படைகளை அனுப்பினால் உலகப் போர் மூண்டுவிடும் என்று கூறியிருக்கிறார் அமெரிக்க ஜனாதிபதி பைடன். அமெரிக்கத் தொலைக்காட்சி ஒன்றுக்குக் கடைசியாக அளித்த நேர்காணலில், ரஷ்யர்களும் அமெரிக்கர்களும் ஒருவரை ஒருவர் சுட்டுக் கொண்டால் அது உலகப் போர், என்று வர்ணித்திருக்கிறார். அதன் பிறகு உக்ரைனில் இருந்து அமெரிக்கக் குடிமக்களை வெளியேற்றுவதற்கு நேரம் இருக்காது. எனவே உடனே கிளம்பி நாட்டுக்கு வாருங்கள், என்று அவர் தனது மக்களை அவசரமாக அழைத்துள்ளார்.

அமெரிக்காவின் இந்த அவசர முடிவைத் தொடர்ந்து இங்கிலாந்து, நெதர்லாந்து, டென்மார்க், இத்தாலி, ஜேர்மனி ஆவுஸ்திரேலியா உட்பட ஒரு டசினுக்கு மேற்பட்ட நாடுகள் தத்தமது குடிமக்களை உக்ரைனை விட்டு விரைந்து வெளியேறும்படி கேட்டிருக்கின்றன.

**நீர் மூழ்கியால் பதற்றம்**

இதற்கிடையில் மேற்கு முனையில் போர்ப் பதற்றம் நிலவுகின்ற சமயத்தில் ரஷ்யாவின் தூரக் கிழக்குக்கரையில் அமெரிக்க நீர்மூழ்கி ஒன்று அத்துமீறிப் பிரவேசித்திருப்பதாக மொஸ்கோ குற்றஞ் சுமத்தியிருக்கிறது. ரஷ்யா - பெலாரஸ் இணைந்து போர் ஒத்திகைகளை நடத்தி வருகின்ற குறில் பசுபிக் தீவின் அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அமெரிக்க நீர்மூழ்கியை விரட்டியதாக மொஸ்கோ கூறுகின்றபோதும் அமெரிக்கா அதனை மறுத்துள்ளது.

**பின்னணி**

சோவியத் யூனியனின் [illegible] இருந்த பெரிய [illegible] உக்ரைன். மொழி, கலாசார அடையாளத்தில் ரஷ்யாவுடன் சில பிரதேசங்கள் ஒத்துப் போவதால் உக்ரைனை ரஷ்யா தன்னுடைய அங்கமாகவே கருதுகிறது. ஆனால், அந்த நாட்டு மக்களோ தங்களை ஐரோப்பாவின் பிற நாடுகளுடன் அடையாளப்படுத்த விரும்புகின்றனர்.

இந்த நிலையில் 'நேட்டோ' நாடுகள் கூட்டமைப்பில் இணைய ரஷ்யாவின் அண்டை நாடான உக்ரைன் ஆர்வமாக இருந்து வருகிறது. இதற்கு அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. ஆனால், இதற்கு ரஷ்யா எதிர்ப்புத் தெரிவித்தது. இதனைத் தொடர்ந்து கடந்த சில மாதங்களாக உக்ரைன் - ரஷ்யாவுக்கு இடையே மோதல் நிலை வலுத்து வருகிறது. (அ-ஒ-இ)

### நான்...

பேசாமல் திரும்பிச் சென்றேன். மீனவர்கள் மதுபோதையில் நிற்கின்றார்கள் என்று நான் சொன்னது உண்மைதான் - இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுப்பர்மடத்தில் இடம்பெற்ற போராட்டத்தில் பிரச்சினையைத் தீர்க்கச் சென்றேன். அங்கு கத்திக் கூக்குரல் எழுப்பினர். அங்கு நான் இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும்? நான் எதற்கும் பயந்தவன் அல்லன். சுமுகமான தீர்வு வேண்டும் என்பதாலேயே கதைக்கச் சென்றேன்.

நான் பிரச்சினையைத் தீர்ப்பேன் என்று சொன்னபோது, எழுத்துமூலம் கேட்டனர். அந்தப் போராட்டத்துக்கு என்ன முடிவு கிடைத்தது?

நான் நினைத்திருந்தால் ஒரு சுண்டு விரலில் போராட்டத்தை முடித்திருப்பேன். நான் அப்படிச் செய்யவில்லை. ஏனெனில் போராடச் சொன்னதே நான்தான். இழுவைப் படகுகள் வரலாம் என்று கடற்படைக்கு நான் நினைத்தால் சொல்லலாம். என்னை யாரும் தடுக்க முடியாது. இலங்கை அரசும் இந்தியாவுடன் முரண்படத் தயாராக இல்லை;முரண்படவும் மாட்டாது.

மீனவர்கள் மதுபோதையில் நிற்கின்றனர் என்று சொன்னது உண்மைதான். அவர்கள் வீம்புக்கு வந்தால் அவர்களது உடம்பு நொந்துவிடும் என்று கருதியே அங்கிருந்து நான் வெளியேறினேன் - என்றார். (அ-ஒ-26)

### உணவுப்...

விளைவைக் கொண்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவிக்கிறது.

ஜனவரி 26 அன்று உலகளாவிய தகவல் மற்றும் முன் எச்சரிக்கை அமைப்பின் புதுப்பிப்பை வெளியிட்ட ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு இதனைத் தெரிவித்துள்ளது.

உர நெருக்கடி மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு ஆகியவற்றுடன் ரூபாவின் மதிப்பு சரிவு காரணமாக விண்ணை முட்டும் பணவீக்கம் காரணமாக பல குடும்பங்கள் உணவு நுகர்வை குறைத்துள்ளன. நாட்டின் முக்கிய உணவான அரிசியின் விலை கடந்த ஆண்டு செப்ரெம்பர் மற்றும் நவம்பர் மாதங்களுக்கு இடையில் பெரும்பாலான சந்தைகளில் உயர்ந்தது. இருப்பினும், டிசெம்பரில் மிகவும் நிலையானதாக இருந்த பிறகு, ஜனவரியில் விலைகள் கணிசமாக அதிகரிக்கத் தொடங்கி, புதிய சாதனை உச்சத்தை எட்டியது. முந்தைய ஆண்டை விட 50 சதவீதத்துக்கும் அதிகமாக விலை அதிகரித்ததாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரூபா மதிப்பு சரிவு மற்றும் பெரும்போக அறுவடையின் உற்பத்தி குறித்த கவலைகள், முக்கியமாக எரிபொருள் மற்றும் உரத் தட்டுப்பாடு காரணமாக விலை உயர்வுக்கு அடிகோலியது. இதேபோல், கோதுமைமா, சீனி, பால்மா மற்றும் பருப்பு வகைகள் உள்ளிட்ட பல்வேறு வகையான இறக்குமதி செய்யப்பட்ட அடிப்படை உணவுப் பொருள்களின் விலைகள் கடந்த செப்ரெம்பரில் இருந்து அதிகரித்து, பல சமயங்களில், ஜனவரியில் உயர்ந்த அளவை எட்டியுள்ளன.

உள்நாட்டுச் சந்தைகளில் அடிப்படை உணவுகள், முக்கியமாக அரிசி மற்றும் சீனியின் இருப்பை மேம்படுத்தவும், அவற்றின் விலை உயர்வைக் கட்டுப்படுத்தவும் அரசு முயற்சிகள் மேற்கொண்டது. கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்திலிருந்து ரூபா மதிப்பு மேலும் சரிவடைந்தமையால் அரசின் இந்த முயற்சிகள் முன்நகரவில்லை. விலை மேலும் அதிகரிக்கிறது.

எரிபொருள் மற்றும் உரம் உள்ளிட்ட விவசாய இடுபொருள்களின் அதிக விலை, அவற்றின் பயன்பாடு குறைவதற்கு வழி வகுக்கும், முக்கிய பருவப் பயிரின் விளைச்சலில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். உற்பத்திச் செலவுகளும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இது ஏற்கனவே உயர்ந்த தானியங்களின் விலை அதிகரிப்பை மேலும் அதிகரிக்கும் என்று அறிக்கை கூறுகிறது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஊழியர் சேம இலாப நிதி

# பகல் கொள்ளையில் களமிறங்கியது அரசு

## சஜித் சுட்டிக்காட்டு

**கொழும்பு, பெப். 14**

**நாட்டின் மிகப் பெரிய நிதியான ஊழியர் சேம இலாப நிதியை பட்டப் பகலில் கொள்ளையடித்து, தமது அரசியல் கையாள்களுக்கு இலாப மீட்ட அரசு செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

ஹிரியால பிரதேசத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசு தற்போது நடைமுறைப்படுத்தும் புதிய விளையாட்டு ஒரு லட்சம் வேலைத்திட்ட மோசடி. அந்த வேலைத்திட்டத்தின் ஊடாக கிராமங்களை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்வதாக அரசு தம்பட்டம் அடித்துக் கொண்டாலும், உண்மையில் அது அரசில் இருப்பவர்களுக்கும், அவர்களது கைஆள்களுக்கும், அவர்களது நட்பு வட்டார உறுப்பினர்கள் ஊழல் செய்வதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட திட்மிடப்பட்ட செயற் றிட்டம்.

வரவு - செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு பணம் ஒதுக்கப்படாது, ஒரு லட்சம் வேலைத்திட்டங்களுக்கு பணம் தேட முயற்சிப்பது, இந்த நாட்டு மக்களின் பணத்தை வைப்பிலிட்ட ஊழியர் நிதியத்தைக் கொள்ளையடித்தேயாகும்.

விவசாயிகளை சட்டியிலிருந்து அடுப்புக்குள் தள்ளிவிடும் தீர்மானத்தை மேற்கொண்டுவிட்டு, விவ சாயிகளைப் பற்றி பேசும் அரசின் முடிவு கேலிக்கூத்தானது.

அவர்களுக்கு உரம் வழங்கப்படுகிறதோ? இல்லையோ? விவசாயிக ளின் வாழ்வாதாரத்தை உயர்த்துவோம் என்று எந்த அடிப்படையில் கூறுகின்றனர் என்பதற்கு அரசு பதில் சொல்ல வேண்டும்- என்றார். (ம-4,இ)

*காய்ச்சலால்...*

ரிழந்துள்ளார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர். சோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அல்லைப்பிட்டியைச் சேர்ந்த ஜேசுதாசன் ஸ்ரனிஸ்லோஸ் (வயது - 26) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 10ஆம் திகதி காய்ச்சல் காரணமாக குறித்த இளைஞர் பனடோல் மருந்து பயன்படுத்தியுள்ளார். காய்ச்சல் குணமடையாமையால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மருந்து எடுத்துள்ளார். இதன் பின்னரும் காய்ச்சல் தொடர்ந்துள்ளது. நேற்றுமுன்தினம் அவர் வெளியில் சென்றபோது மயங்கி விழுந்துள்ளார். உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அவர் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

ஆயினும் ஏற்கனவே அவர் உயிரிழந்து விட்டாரென மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அவருக்கு மேற்கொள்ளப்பட்டபி.சி.ஆர். பரிசோதனையில்கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ஓ-26)

*சந்தர்ப்பம்...*

மக்களை ஏமாற்றும் இந்த அரசை விரட்டுவோம் என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். கண்டி, உடுதும்பர- ஹசலக்கவில் நேற்றுக் காலை நடைபெற்ற, ஐக்கிய மக்கள் சக்தியின் மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- சீனியின்றி தேநீர் அருந்துவோம், மிளகாயின்றி ரசம் உண்போம், புல்லையேனும் நாம் உண்போம் என்று முன்பு கிண்டலாகச் சொல்வார்கள். அதேபோல இப்போது பசளையின்றி விளைச்சல் பெறுவோம், நெல்லின்றிசோறு சாப்பிடுவோம், மின்சாரமின்றி நாம் வாழ்வோம் என்று சொல்லிக்கொண்டு, பொறுமையுடன் மக்கள் வாழ்வார்கள் என்று இந்த அரசு நினைத்துக் கொண்டிருக்கிறது.

நீங்கள் இன்னும் பொறுமை காப்பீர்களா? உங்களுக்கு உரம் தராத அரசு இன்னும் ஆட்சியை தொடரவேண்டுமா? ஒவ்வொரு வீட்டுக்கும் எரிவாயுக் குண்டைக் கொடுத்த அரசு இன்னும் தொடர வேண்டுமா? நாடு முழுவதும் மக்கள் வரிசையில் நிற்கும் நிலைக்கு இந்நாட்டை உருவாக்கிய அரசு இன்னும் தொடரவேண்டுமா? உங்களின் ஈ.பி.எவ். மற்றும் ஈ.ரி.எவ். நிதியைக் கொள்ளையடிக்க முயற்சிக்கும் அரசு இன்னும் தொடர்ந்து ஆட்சியில் இருக்க வேண்டுமா? ஆட்சிக்கு வந்த உடனேயே பணக்கார குபேரர்களுக்கு வரிச்சலுகை அளித்து நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்த இந்த கொடூர அரசு இன்னும் தொடர வேண்டுமா? கொரோனாவில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிர்களை பலிகொடுக்கும் வரை கட்டுக்கதைகளின் பிரகாரம் பணியாற்றிய அரசு இன்னும் ஆட்சியில் தொடர வேண்டுமா? எனவே கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே இந்த அரசைக் கவிழ்க்க வேண்டும். அதன் பின்னர் அடுத்த தலைமுறையின் பிரச்சினைகளுக்கு விடை தேடும், திறமை, ஆற்றல் மற்றும் இயலுமைக்கு இடமளிக்கும் அரசை உருவாக்க வேண்டும். இதனை மேற்கொள்ள தற்போதுள்ள மாற்று சக்தி ஐக்கிய மக்கள் சக்தி மட்டுமே- என்றார். (அ-ஓ.5)

*உலக...*

இலங்கை காணாமற் போகும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது= இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்ததாவது,தற்போதைய ஆட்சியால் நாடு சீரழிந்துள்ளது. நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் சென்றுள்ளது. நாடு மீண்டெழ முடியாத நிலையில் உள்ளது.

ஆட்சி மாற்றமே தற்போதைய உடனடித் தேவையாகும். எனவே, நாட்டையும், மக்களையும், ஜனநாயகத்தையும் நேசிக்கும் மக்கள் பிரதிநிதிகள் ஓரணியில் உடன் திரள வேண்டும். அப்போதுதான் நாட்டை மீட்டெடுக்க முடியும். இல்லையேல் உலக வரைபடத்தில் இலங்கை இல்லாமல் போகும் நிலைமைதான் ஏற்படும். அவ்வளவு படுமோசமான நிலைமையில் நாடு உள்ளது - என்றார். (அ-ஓ-22)

*தவறான...*

யில், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு ஒரு வாரத்தின் பின்னர் உயிரிழந்துள்ளார். மிதுனராஜா ரொபினா (வயது - 28) என்ற கர்ப்பிணிப்பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தக் கர்ப்பிணி, குடும்பத் தகராறு காரணமாக தனக்குத் தானே தீமூட்டியுள்ளார். தீக்காயங்களுடன் கடந்த 6 ஆம் திகதி பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். இந்த நிலையில் அவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ஓ-26)

## மாலைதீவுபிரஜைக்கு ஆயுள்தண்டனை

கொழும்பு, பெப். 14

மாலைதீவுப் பிரஜை ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துள் ளது.

265 கிராம் ஹெரோய்ன் போதைப்பொ ருளை வைத்திருந்த குற்றத்துக்காக அவருக்கு இந்த தண்டனை பிறப்பிக்கப்பட் டுள்ளது.

இந்த வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்தத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. மாலைதீவு பிரஜையான லத்தீப் இஷான் என்பவருக்கே கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன இந்தத் தண்டனையை விதித்துள்ளார்.

இந்த நபருடன் கைதான மற்றுமொரு சந்தேகநபரை நிரபராதியாக கருதி விடுவிக்க நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (எ-இ)

**English Classes**
Gr-1 to O/L
வீடு வந்து கற்பிக்கப்படும்.
Grammar and Syllabus
T.P: 077 3314 608

**விற்பனைக்கு**
யாழ். செட்டித் தெருவில் 2 பரப்புக் காணியும், 3 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
077 232 5565
(CR 375691)1-6

**துரித பொதிகள் சேவை**
உள்நாடு வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகை
Australia : 1850/=
France : 1400/=
Germany : 1250/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, யாழ்ப்பாணம்.
0777 554528

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 42 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 14 அடி பாதையுடன் தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கப்படும்.
நிலப்பரப்பு
A-32 பிரதான வீதியில் இருந்து 500 m தூரம்.
பயன்தரும் 250 தென்னைகள் உள்ளன. நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன (பைப் லைனிங்). பார்வையிடும் நேரம்: காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை.
ஒரு பரப்பின் விலை 350,000/=
தரகர் தேவையில்லை.
தொடர்பு: 077 814 7389
077 117 8578

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 36 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
நிலப்பரப்பு
2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன்
A-32 பிரதான வீதியில் இருந்து 400 m தூரம்.
பார்வையிடும் நேரம்:
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை.
ஒரு பரப்பின் விலை 300,000/=
தரகர் தேவையில்லை.
தொடர்பு: 077 814 7389
077 117 8578

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிரைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.